பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

இனிது ரகசியம் அல்ல!

வடக்கு முதலமைச்சராவதற்கு மாவைக்கும், சுமந்திரனுக்கும்தகுதியே இல்லை என்று கூறியிருக்கின்றார் வடக்கின் தற்போதைய முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

இப்படி முதல்வர் விக்னேஸ்வரன் கூறினார் எனத் தெரிவித்து கொழும்பு தமிழ் பக்கம் 03

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 ஆடி 14 திங்கட்கிழமை 30.07.2018 கதிர் 266

- தேசியப் பட்டியல் எம்.பி. தருவீர்களா? இல்லையா?
- விக்னேஸ்வரன் குறித்து தமிழரசு நிலைப்பாடு யாது?
- தீர்வு பற்றித் திட்டவட்டமான முடிவு என்ன?

தமிழரசுக்கு ரெலோ காலக்கெடு!

சம்பந்தன், மாவையிடம் நேரடியாகத் தெரிவிப்பு

திருகோணமலை, ஜூலை 30

★ வாக்குறுதி அளித்தபடி தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ரெலோவுக்கு வழங்குவீர்களா? இல்லையா?

★ முதலமைச்சர் விக்னேஸ்வரன் விவகாரத்தில் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவீர்களா?

★ தீர்வுத் திட்ட முயற்சிகள் தொடர்பில் திட்டவட்டமான நிலைப்பாடு யாது?

- இது போன்ற விடயங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதற்கு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ காலக்கெடு விதித்திருக்கின்றது.

தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனையும், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவையும் நேரில் சந்தித்து இப்படிக் காலக்கெடு விதித்து விடயங்களை அறிவுறுத்தியிருக்கின்றது ரெலோ. பக்கம் 14

அம்பாறை விபத்தில் கணவன் - மனைவி சாவு



அம்பாறை – கல்முனை பிரதான வீதியின் வலதாபிட்டிய பகுதியில் இடம்பெற்ற விபத்தில் கணவனும் மனைவியும் உயிரிழந்துள்ளனர்.

மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் பக்கம் 03

புதுக்கட்சிக்கு ஆதரவு தரப் பலரும் தயார் என்கின்றார் விக்னேஸ்வரன்

கொழும்பு, ஜூலை 30

தான் புதுக்கட்சி ஆரம்பித்தால் ஆதரவு தருவதற்குப் பல தரப்பினரும் தயாராக இருக்கின்றனர் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக் னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுக் காலை கொழும்பு வெள்ளவத்தை தமிழ்ச் சங்கத்தில் சட்டமாணவர் இந்துமகாசபையின் 'நக்கீரம்' இதழ் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டபின்னர் ஊடகவியலாளர்களுடன் உரையாடிய சமயமே அவர் இதனைக் கூறினார்.

தனிக்கட்சி ஒன்றை ஆரம்பிக்கமுடிவுசெய்துவிட்டீர்களா என்று ஊடகவியலாளர் கேட்டனர். பக்கம் 14

மாநகர சபை உறுப்பினருக்கு பிரதி மேயரால் அச்சுறுத்தல்

யாழ். பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். மாநகர சபையின் பிரதி மேயர் துரை ராஜா ஈசனுக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்உறுப்பினரான விஷ்ணுகாந்தனுக்கு அச்சுறுத்தல் விடுத்தார் எனத் பக்கம் 14

அறிக்கை தயாரிப்பு முழுந்ததும் வழிநடத்தல் குழு உடன் கூடும்

ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

புதிய அரசமைப்பை உருவாக்கும் நோக்கில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினால் தற்போது புதிதாக அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. ஆகவே இந்த அறிக்கை தயாரிப்புப் பணிகள் பூர்த்தியானதும் வழிநடத்தல் குழு உடன் கூடும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி பக்கம் 14

வடமாகாண சபை சாதனை தீர்மானம் நிறைவேற்றுவதில்!

கொழும்பு, ஜூலை 30

தீர்மானங்கள் மேல் தீர்மானங்கள் நிறைவேற்றுவதில் வடக்கு மாகாண சபை சாதனை படைத்திருப்பதாக 'சண்டே ரைம்ஸ்' ஆங்கிலவார இதழ் 'புகழாரம்' பக்கம் 03

மடுப் பதியில் மைத்திரி நேற்று சிறப்பு வழிபாடு

மன்னார், ஜூலை 30

மன்னார் மடு அன்னை ஆலயத்தில் நேற்று இடம் பெற்ற சிறப்பு ஆராதனையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது குடும்பத்தினருடன் பக்கம் 14

கிழக்கின் அபிவிருத்திக்கு நல்லாட்சி விசேட திட்டம்

பிரதமர் ரணில் அறிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 30

போரினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தைக் கட்டியெழுப்பும் வகையில் விசேட பொருளாராதார அபிவிருத்தித் திட்டம் ஒன்றை அறிமுகம் பக்கம் 14

விசேட மேல் நீதிமன்றங்கள் எமது ஆட்சியில் இயங்கா!

கூறுகின்றார் பஸில் ராஜபக்ஷ

கொழும்பு, ஜூலை 30

நல்லாட்சி அரசு ஏற்படுத்தியுள்ள விசேட மேல் நீதிமன்றங்கள் எவையும் அடுத்து ஆட்சிக்கு வரும் தமது அரசின் கீழ் இயங்கா என முன்னாள் அமைச்சர் பஸில் பக்கம் 14

சுமந்திரனைக் கொல்லச் சதி:

பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் ஐவர் மீது இன்று குற்றப்பத்திரம்

கொழும்பு, ஜூலை 30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைக் கொலை செய்ய, இரண்டு தடவைகள் முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் பக்கம் 14

மன்னாரில் மீட்ட எலும்புக்கூடுகள் ஆய்வுகளுக்காக அமெரிக்காவுக்கு

கொழும்பு, ஜூலை 30

மன்னார் நகர நுழைவாயிலில் உள்ள சதொச கட்டட வளாகத்தில் உள்ள மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் அமெரிக்காவுக்கு அனுப்பப்படவுள்ளன. பக்கம் 14

வடமாகாண பாடசாலைகளில் 353 ஆசிரியர்களுக்கு நியமனம்

புதனன்று வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 30

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான ஆசிரியர் நியமனம் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை வழங்கப்படவுள்ளதாக வடக்கு மாகாணக் பக்கம் 14

காலைக்கதிர் Kalaikkathir

மத்தள விவகாரத்தில் இந்தியாவின் குழப்பம்; அடுத்த வாரம் பதிலளிக்குமாம் இலங்கை அரசு

கொழும்பு, ஜூலை 30

மத்தள விமான நிலைய விவகாரத்தில் இந்தியாவின் அணுகுமுறை தொடர்பாக எழுந்துள்ள குழப்பங்கள் குறித்து இந்தவாரம் இலங்கை அரசு விளக்க மளிக்கும் என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய விமானத்துறை அதிகாரிகளுடன் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. சில அதிகாரிகள், மத்தள விமான நிலையத்துக்கும் சென்று ஓடுபாதையின் தரத்தைப் பரிசோதனை செய்திருந்தனர்.

சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலரே இது தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் வைத்துள்ளார்.

தற்போது வெளிநாடு சென்றுள்ள அவர் அடுத்த வாரம் நாடு திரும்பிய பின்னர், இது தொடர்பான மேலதிக கருத்துக்களை வெளியிட முடியும் என்று தெரிவித்துள்ளார்.

மத்தள விமான நிலையத்தை இந்திய விமான நிலைய அதிகார சபையுடன் கூட்டு முயற்சியாக செயற்படுத்தவுள்ளதாகவும், இதற்கான வணிகத் திட்டத்தை இந்திய விமான நிலைய அதிகாரசபையிடம் கோரியுள்ளதாகவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறியிருந்தார்.

எனினும், அத்தகைய எந்த திட்டமும் இந்திய விமான நிலைய அதிகார சபையிடம் கிடையாது என்று இந்திய நாடாளுமன்றத்தில், இந்தியாவின் சிவில் விமானப் போக்குவரத்து இணை அமைச்சர் ஜெயந்த் சின்ஹா தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

அமைச்சர் ராஜிதவுக்கு பாராட்டு விழா!

உலக சுகாதார அமைப்பின் உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சுகாதார போஷாக்கு மற்றும் சுதேசிய வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவை பாராட்டும் வைபவமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நாளை பிற்பகல் 2.00 மணிக்கு கொழும்பு 'நெலும் பொக்குண' என்ற தாமரைத் தடாக கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

சுகாதார போஷாக்கு மற்றும் வைத்தியத்துறை அமைச்சு, உலக சுகாதார அமைப்பு, சுகாதார பணியாளர்களின் சங்க சம்மேளனம் ஆகியன ஒன்றிணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உலக சுகாதார அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி டொக்டர் ராசியா பென்சே ஆகியோர் வைபவத்தில் கலந்து கொள்ள உள்ளனர்.

பொதுமக்களின் நலனுக்காக சுகாதார அமைச்சர் என்ற ரீதியில் இவரால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களும் நிகழ்வில் பாராட்டப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் புலைமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் கிராமப்புற மாணவருக்கு கருத்தரங்கு

வவுனியாவில் புலைமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள கிராமப்புற மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலயம், இராசேந்திரங்குளம் அ.த.க. பாடசாலை, மூன்றுமுறிப்பு அ.த.க.பாடசாலை, கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயம் மற்றும் பாரதி வித்தியாலயத்தை சேர்ந்த நூறு மாணவர்கள் இவ் இலவச புலைமைப் பரிசில் கருத்தரங்கில் கலந்து கொண்டிருந்தனர்.

இப் புலைமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கில் யாழ் மற்றும் வவுனியா ஆசிரியர் எஸ்.எஸ். தீபன் வளவாளராகக் கலந்துகொண்டார்.

இவ் புலைமைப்பரிசில் பரீட்சைக்கானஇலவசகருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்த ஏற்பாட்டாளர்கள் கருத்து தெரிவிக்கையில்-

கிராமப்புறங்களில் கல்வி கற்றுவரும் மாணவர்களின் திறமையை மேலும் விருத்தி செய்யவும் எதிர்வரும் புலைமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அவர்களுக்கான வழிகாட்டி கருத்தரங்காக இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது எனத் தெரிவித்தனர். (க-100)

நகரசபையால் புதிதாக பொருத்தப்பட்ட மின்விளக்குகளில் சில செயலிழப்பு!

வவுனியா மக்கள் விசனம்

வவுனியா, ஜூலை 30

வவுனியா நகரசபையால் புதிதாக பொருத்தப்பட்ட சில வீதி மின் விளக்குகள்செயலிழந்து விட்டன என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரசபையால் 400 தானியங்கி மின் விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டு வீதிகளில் பொருத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் புதிதாக மின் விளக்குகள் பொருத்தப்பட்ட நகரசபைக்குட்பட்ட சில இடங்களில் உள்ள சில மின் விளக்குகளின் உணரிகள் (சென்சர்) செயலிழந்தமையால் மின் விளக்குகள் ஒளிரவில்லை. இதனால்தரமற்றமின்விளக்குகளை பொருத்தி நகரசபை தம்மை ஏமாற்றி விட்டதாக அப் பகுதி மக்கள்விசனம்தெரிவித்துள்ளனர்.

(க- 100)

முன்னாள் தூதுவர்களுடன் மஹிந்த ஆலோசனை!

எதிர்காலத்தில் தாம் அமைக்கப்போகும் அரசின் வெளிவிவகாரக் கொள்கை தொடர்பான பரிந்துரைகளைச் சமர்ப்பிக்குமாறு, முன்னைய ஆட்சிக்காலத்தில் நியமிக்கப்பட்ட இராஜதந்திரிகளிடம், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில், வெளிநாடுகளுக்கான தூதுவர்களாக நியமிக்கப்பட்டவர்களை மஹிந்த ராஜபக்ஷ சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில், மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட அனைத்து முன்னாள் தூதுவர்களும் பங்கேற்றனர் என்று, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாங்கள் பயனுள்ள கலந்துரையாடலை நடத்தியுள்ளோம். எமது ஆட்சிக்காலத்தின் போது, நாங்கள் எங்கே தவறு செய்திருக்கலாம் என்று நாட்டின் தற்போதைய நிலையுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்தோம்.

எதிர்கால வெளிவிவகாரக் கொள்கைகள் பற்றிய தனது எண்ணங்களைச் சமர்ப்பிக்குமாறு முன்னாள் தூதுவர்களிடம் மஹிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளார்.

முன்னாள் தூதுவர்கள் தாம் பணியாற்றிய நாடுகளின் புவியியல் பிராந்தியங்களின் அடிப்படையில் பல்வேறு குழுக்களைத் தமக்கிடையில் உருவாக்கியுள்ளனர்.

ஆசியாவில்பணியாற்றியதூதுவர்கள் ஒரே குழுவாக இருக்கின்றனர். அவர்களின் எண்ணங்களை முறைப்படுத்தவதற்காக அவர்களை நான் மாதம் தோறும் சந்திப்பேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் 'விழுதுகள்' பத்திரிகை வெளியீட்டு விழா

வவுனியா, ஜூலை 30

வவுனியாவில் 'விழுதுகள்' பத்திரிகை வெளியீட்டு விழா நேற்று பத்திரிகையின் பிரதம ஆசிரியர் வேலு ஜீவராஜா தலைமையில் வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பத்திரிகையின் முதற்பிரதியை கைத்தொழில் வர்த்தக அமைச்சின் இணைப்புச் செயலாளர் எம்.ஜ.முத்து முகமது வெளியிட்டு வைக்க பத்திரிகையின் பிரதம ஆசிரியர் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து நிகழ்வில் அதிதிகளாக கலந்து கொண்டிருந்த வவுனியா நகரசபை உறுப்பினர்களான எம்.எஸ்.அப்துல்பாரி, திருமதி ரி.மஞ்சுளா, இலங்கை திருச்சபை தமிழ் மகா வித்தியாலய அதிபர் ஆர் நவரத்தினம், வவுனியா தமிழ் தெற்கு பிரதேசசபை உறுப்பினர் எஸ்.ரூபலா, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மகளிர் அணி செயலாளர் விஜயரெட்ணம் கனகம்மாள் ஆகியோர் விழுதுகள் பத்திரிகையின் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர். (க – 100)

ஸ்ரீலங்கன் நிறுவனத்திற்கு புதிய விமானம்

கொழும்பு, ஜூலை 30

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் Airbus Neo Fleet ரக பயணிகள் விமானம் ஒன்றை பெற்றுக்கொண்டுள்ளது.

இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் தகவல் வெளியிட்டுள்ள ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் விமானத்தின் படங்களையும் பதவிவேற்றம் செய்துள்ளது.

எயர் இந்தியா, இன்டிகோ, எயார் ஏஷியா போன்ற விமான நிறுவனங்கள் இந்த விமானங்களை ஏற்கனவே பயன்படுத்தி வருகின்றன.

A319neo, A320neo, A321neo போன்ற ரகங்களில் இந்த விமானம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நகரை அண்டி 3 இடங்களில் வாள்வெட்டுக் குழு அட்டகாசம்





யாழ்ப்பாணம், ஜூலை 30

ஆனைக்கோட்டை மற்றும் கொக்குவில் ஆகிய இடங்களில் 3 வீடுகளுக்குள் புகுந்த வாள் வெட்டுக் கும்பல் அங்குள்ளவர் களை அச்சுறுத்தும் வகையில் பெறுமதியான பொருள்களை அடித்து உடைத்து அட்டூழியத் தில் ஈடுபட்டுத் தப்பித்துள்ளது.

ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் – புது வீதியில் ஒரு வீடும் , ஆறுகால்மடம் – பொன்னையா வீதியில் ஒரு வீடும் மற்றும் கொக்குவில் பிரம்படி லேனில் ஒரு வீடுமே இவ்வாறு தாக்கு தலுக்குள்ளாகின.

4 மோட்டார் சைக்கிள்களில் வந்த முகமூடி அணிந்த 8 பேர் கொண்ட கும்பலே இந்தத் தாக் குதல்களை முன்னெடுத்துள் ளது.

வீடுகளின் முன்னால் நின்ற மோட்டார் சைக்கிள்களைத் தாக்கியும் தீ வைத்தும் வீடு ளுக்குள் இருந்த பெறுமதியான தளபாடங்களைச் சேதப்படுத் தியும் கும்பல் அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணி முதல் 5.30 மணிக்குள் இந்த அட்டூழியங் கள் கும்பலால் அரங்கேற்றப்பட் டுள்ளன என்று பொலிஸார் தெரி வித்தனர்.

கூலிக்கு வன்முறையில் ஈடுபடும் கும்பலே இந்தத் தாக் குதல்களை முன்னெடுத்தது என்று தெரிவிக்கும் பொலிஸார், அக்கும்பலைக் கைது செய்யும் நடவடிக்கை தொடர்பில் எதுவுமே குறிப்பிடவில்லை.

சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத்துள்ள னர்.

வாள்வெட்டில் காயமுற்றோருக்கு ஆஸ்பத்திரியில் வைத்தும் தாக்குதல்

யாழ்.வரணி பகுதியில் இடம் பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டவர்கள் மீதும் அவர்களை பார்க்க சென்றவர் கள் மீதும் வைத்தியசாலைக்குள் வைத்து நேற்று தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வரணி பகுதியில் மரணச் சடங்கு ஒன்றில் இரு குழுக்களுக் கிடையில் உருவான வாய்த் தர்க்கம் நேற்றுமுன்தினம் வாள் வெட்டில் முடிந்தது. இதில் 5பேர் காயமடைந்து பருத்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீதும் இவர்களை வைத்தியசாலையில் பார்க்கச் சென்றவர்கள் மீதும் நேற்று மாலை வைத்தியசாலைக்குள் வைத்தே ஒரு குழு தாக்குதல் நடத்தியுள்ளது. தாக்குதல் இடம் பெற்றபோது வைத்திசாலைக் குள் மக்கள் மற்றும் வைத்தியர் கள் இருந்துள்ளனர்.

இந்நிலையில் தாக்குதலுக் குள்ளான தரப்பின் நியாயங் களைக் கேட்க தயாரில்லாத பொலிஸார், தாக்குதல் நடத்தி யவர்களுக்கு ஆதரவாக இருக் கின்றனர் என்று தாக்குதலுக் குள்ளான தரப்பு குற்றச் சாட்டை முன்வைத்துள்ளது

இது விடயமாக மக்களை அழைத்துக் கொண்டு வட மாகாண பிரதி பொலிஸ்மா அதி பரை அவர்கள் இன்று சந்திக் கவுள்ளனர் என்றும் தெரிய வரு கின்றது.

அம்பாறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனம் ஒன்றும் சிற்றூர்த்தி யும் ஒன்றோடு ஒன்று நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயம டைந்த சிற்றூர்தி ஓட்டுனர், அவ ருடைய மனைவி மற்றும் உற வினர் ஒருவர் ஆகியோர் அம் பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் அவர்களில் கணவனும் மனை வியும் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மஹன்போக, ஹத்திஸ்ஸ பகுதியைசேர்ந்த 56 வயதுடைய கணவரும் 45 வயதுடையமனை வியுமே இவ்வாறு உயிரிழந்துள் ளனர்.

விபத்து தொடர்பில் டிப்பர் வாகனத்தின் ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார். சம்மாந் துறை பொலிஸார் மேலதிக விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்.எம். வானொலி ஒன்று சில தினங்களுக்கு முன்னர் செய்தி ஒன்றை முதல் நாள் இரவு ஒலிபரப்பியது என இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

முதலமைச்சர் அப்படிக் கூறியிருப்பாரா என்ற சந்தேகத் தொனியுடன்தான் அந்தத் தகவலை கடந்த திங்களன்று இப்பத்தியில் நான் குறிப்பிட் டிருந்தேன்.

ஆனால், முதல்வர் உண்மை யில் அப்படிக் கூறித்தான் இருக் கின்றார்.

இது தொடர்பில் முதல்வரி டம்கேட்கப்பட்டகேள்வியும்விடை யும் வெளியாகியுள்ளன.

மாவை மற்றும் சுமந்திரன் தொடர்பில் முதல்வர் விக் னேஸ்வரன் எத்தகைய கருத்து நிலைப்பாட்டைக் கொண்டிருக் கின்றார் என்பதை அறிவதற் காக அந்தக் கேள்வியையும் பதி லையும் மட்டும் இங்கு தருகின் றோம்:–

கேள்வி: சில புறக்காரணி களால் கூட்டமைப்பில் உங் களால் போட்டியிட முடியாமல் போனால், கூட்டமைப்பின் சார் பில் முதலமைச்சர் வேட்பாள ரைத் தெரிவு செய்யும் பொறுப்பு உங்களுக்கு வழங்கப்பட்டால், மாவை சேனாதிராசா, சுமந்திரன் இவர்கள் இருவரில் யாரை நீங்கள் தேர்வு செய்வீர்கள்?

பதில்: இருவரும் வெவ்வேறு காரணங்களுக்காகத் தகுதியில் லாதவர்கள். தகுதியில்லாதவர் களை எப்படித் தேர்வு செய்வது? முதலமைச்சர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர் பல தகைமைகளைக் கொண் டிருக்க வேண்டும்.

1) மக்களை மாக்களாக அகந்தையுடன் நோக்குபவர்கள் இந்தப் பதவிக்கு இலாயக்கற்ற வர்கள்.

2) சிறந்த நிர்வாகம் தெரிந்த வராக இருக்க வேண்டும்.

3) சகலரையும் கற்றறியும் திறனுடையவராக இருக்க வேண் டும்.

4) வெளிநாட்டுப் பிரதிநிதிகள் யார் வந்தாலும் அவர்களுக் குப் புரியும் மொழியிலே எமது மாகாணம் பற்றிய கருத்துக் களை தெரியப்படுத்தக் கூடிய வராக இருக்கவேண்டும். அவர் கள் சந்தேகங்களைத் தீர்க் கக்கூடிய வராகவும் இருக்க வேண்டும்.

5) மக்களிடையே சாதி, சமய, குல, கோத்திர, இன வேற்றுமை பாராட்டாதவராக இருக்க வேண் டும்.

6) ஐந்து மாவட்டங்களுக்கும் பிரயாணம் செய்யக் கூடியவராக இருக்க வேண்டும்.

7) மாகாணசபை நடவடிக் கைகளைப் புரிந்துகொள்ளக் கூடிய தகைமை இருக்க வேண் டும்.

8) கோப்புக்களையும் அறிக் கைகளையும் நீண்ட நேரம் இருந்து பரிசீலிக்கக்கூடிய பக்குவம் அவருக்கு இருக்க வேண்டும்.

9) வட, கிழக்கு மாகாணம் பற்றிய முன்னோக்கிய தூர காலச் சிந்தனைகள் அவசியம்.

10) விலை போகாதவராக இருக்க வேண்டும்.

இவ்வாறு தகைமைகளைக் கொண்ட ஒருவரே முதமைச்சர் ஆகிவிடமுடியும். வெறும் கடந்த காலத்தியாகங்களுக்கு வெகுமதி யாக இப்பதவியைக் கொடுத்தோ மானால் முதலமைச்சர் பதவி வலு இழந்துவிடும்.

– இப்படிப் பதில் கூறியிருக் கின்றார் முதல்வர் விக்னேஸ் வரன்.

மேற்படி தகுதி எல்லாம் தமக்கு இருக்கின்றன என்று கருத்துடன்தான் இந்த விட யத்தை முதல்வர் அவிழ்த்து விட்டிருக்கின்றார் என்று நினைக் கிறேன் நான். உங்கள் கருத்து என்ன வாசகரே...?

- மின்னல் -

மர்மநபர்களால் அராலியின் அச்சம்

யாழ்.அராலி பகுதியில் இரவு நேரங்களில் மக்கள் குடிம னைகளுக்குள் நடமாடும் மர் மநபர்களால் தமது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறும் மக்கள், பொறுப்பு வாய்ந்தவர் கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கூறியுள்ளனர்.

வலி,மேற்கு பிரதேசசபை தலைவர் த.நடனேந்திரன் இது குறித் துக் கூறுகையில் –

அராலிப் பகுதியில் இரவு நேரங்களில் மர்ம நபர்கள் வீடுகளுக் குள் நுழைகின்றார்கள். கறுப்பு நிறத்தில் உடைகளை அணிந்திருப் பதுடன் முகத்திற்கும் கறுப்பு நிற சாயம் பூசியிருக்கின்றார்கள்.

இவர்கள் மக்களை தாக்குவதில்லை. களவு எடுப்பதில்லை. ஆனால் மக்களுடைய வீடுகள் மீது கல் வீசுவதுடன், மக்களை அ ச் சுறுத்தும் வகையில் நடந்து கொள்கிறார்கள். இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேரில் வந்து பார்வை யிட்டிருந்தார். எனினும் மர்ம மனிதர்களின் நடமாட்டம் குறைய வில்லை. எனவே பொறுப்புவாய்ந்தவர்கள் இது தொடர்பாக நட வடிக்கைகளை எடுக்க வேண்டும். – என்றார்.

அராலி மக்கள் கூறுகையில் –

இரவு 7 மணி தொடக்கம் இரவு 11 மணி வரையில் இவ்வாறான மர்ம நபர்களுடை ய நடமாட்டம் நடக்கிறது. வாகன சத்தம் கேட் கிறது. அதன் பின் கறுப்பு உடையணிந்த – முகத்திற்கு கறுப்பு சாயம் பூசியவர்கள் – நடமாடுகிறார்கள்.

மக்கள் துரத்தி சென்றால் மதில் மற்றும் வேலியை ஒரே தடவை யில் பாய்கிறார்கள். அவர்கள் குள்ளமானவர்களாக இருக்கிறார் கள். இதனால் இரவு நேரங்களில் தூங்கா மல் விழித்திருக்கவேண்டி யுள்ளது.

இரவு நேரங்களில் விழித்திருப்பதனால் பகலில் வேலைக்கு செல்ல இயலாத நிலையில் வாழ்ந்து வருகின்றோம். குள்ள மனி தர்களை பிடிப்பதற்கு நாங்கள் வீதியில் நின்றால் உடனேயே பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகிறார்கள்.

வந்தவர்கள் எங்களை வீதியில் நிற்கவேண்டாம் என அச் சுறுத்துகிறார்கள். இந்த மர்ம நபர்களுடைய நடமாட்டத்தினால் நாம் அச்சத்துடன் வாழ்கிறோம். பொறுப்பு வாய்ந்தவர்கள் இது தொடர் பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். – என்றனர்.

வெடி பொருள்களை கண்டுபிடிக்க இனி நாய்களுக்குப் பதிலாக கீரிகள்

இலங்கை இராணுவம் பரீட்சார்த்த முயற்சி

இலங்கை இரா ணுவத்தினர் வெடி பொருள்களையோ அல்லது குற்றச் செயலுடன் சம்பந்தப்பட்ட பொருள்களையோ கண்டறிவற்காக நாய் களையே பெரும் பாலும் பயன்படுத்தி வருகின்றனர்.

அந்த வகையில் தற்போது இலங்கை இ ரா ணு வ த் தி ன ர் வெடிபொருள்களைக் கண்டறிவதற்காகக் கீரிப்பிள்ளைகளுக்கு பயிற்சி அளித்து வருகின்றமை தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த பயிற்சியானது உலகில் வேறெந்த இராணுவத்தினரா லும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பொறியியல் படையின் கீழ் 14ஆவது இரசாயன உயிரியல் கதிரியக்க மற்றும் அணு ஆயுத படைப்பிரிவின் கீழ் இந்த கீரிப் பிள்ளைக்கான பயிற்சியளிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பயிற்சிக்கு இலங்கையில் உள்ள சாம்பல் நிறமுள்ள கீரிப்பிள்ளைகளே சிறப்பு வாய்ந்தவை என்றும் பெண் கீரிப் பிள்ளைகளுக்கு பயிற்சி அளித்தல் மேலும் பயனளிக்க கூடிய தாக இருக்கும் என்றும் நம்பப்படுகிறது.

வெடிகுண்டுகளைத் தேடுவதற்காக நாய்களைப் பயன்படுத் தியபோதிலும் சிலநேரங்களில் அவற்றைக்கண்டு பிடிக்கமுடிவ தில்லை. அதற்குத் தீர்வாகவே இந்தக் கீரிப்பிள்ளைகளுக்கு பயிற்சி அளிப்பதாக தெரிவிக்கப்படுகிறது

வடமாகாண சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூட்டியிருக்கின்றது.

'வடக்கு மாகாண சபை, தீர் மானங்களின் இல்லம்' என்ற தலைப்பில் அது தனது செய்தி விவரணத்தைப்பிரசுரித்துள்ளது.

எதிர்வரும் ஒக்டோபரில் முடிவடையவிருக்கும் தனது ஐந்து வருட ஆட்சிக்காலத்தில் இதுவரை 415 வேறுபட்ட தீர் மானங்களை அது நிறைவேற் றியுள்ளது.

சபை அமர்வுகளின் எண் ணிக்கைப்படி பார்த்தால் ஒரு நாள் அமர்வுக்கு ஏழு தீர் மானங்கள் என்ற அடிப்படை யில் அது நிறைவேற்றியுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள அந் தப் பத்திரிகை, இலங்கையில் ஆகக் கூடிய தீர்மானங்களை நிறைவேற்றிய மாகாணசபை என்ற பெயரை அது ஈட்டியிருப் பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு மாகாண சபை தனது நியாயாதிக்கத்துக்குள் வராத பல விடயங்கள் தொடர்பில் தீர்மா னங்களை நிறைவேற்றியுள்ளது.

பலாலி விமானத் தளத்தை சர்வதேச விமான நிலையமாகத் தரம் உயர்த்துதல், புலிகளைத் தோற்கடித்த இராணுவ நட வடிக்கை குறித்த விடயத்தை சர்வதேச நீதிமன்றத்தில் விசா ரணை செய்தல் போன்ற – தனக்கு நியாயாதிக்கம் இல்லாத – பல விடயங்களை ஒட்டி வடக்கு மாகாண சபை தீர்மானம் நிறை வேற்றியுள்ளது. – என்று அப்பத் திரிகை தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

32ஆம் ஆண்டில் ஒப்பந்தம்

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் ஒப்பமிட்டு நேற்றுடன் முப்பத்தியொரு ஆண்டுகள் கடந்து விட்டன.

தனி மனிதனாகத் துணிந்து நின்று ஆசிய வல்லரசுக்கு எதிராக அறப்போர் நிகழ்த்திய மாவீரன் தியாகி திலீபனின் ஈடு இணையற்ற அர்ப்பணிப்பில் தொடங்கி, இந்திய வல்லரசின் பிரதமராக மீளவும் உயரவிருந்த ராஜீவ் காந்தி வரை பலரின் மரணத்துக்கும், துன்பியல் நிகழ்வுகளுக்கும் காரணமாக அமைந்துவிட்ட வரலாற்று நிதர்சனங்களின் ஆரம்பப் புள்ளி இந்த ஒப்பந்தத்தில் இருந்துதான் தொடங்குகின்றது.

***"திடீரென மிகவும் அவசரமாக எமது மக்களையோ எமது மக்களின் பிரதிநிதிகளாகிய எம்மையோ கலந்தாலோசிக்காமல், இந்தியாவும் இலங்கையும் செய்து கொண்ட ஒப்பந்தம் இப்பொழுது அவசர அவசரமாக அமுலாக்கப்பட்டு வருகின்றது...."* – என்று விடுதலை புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமது சுதுமலைப் பிரகடன உரையில் பகிரங்கமாக அறிவித்தபடி இந்த ஒப்பந்தம் இலங்கைத் தமிழர்கள் மீது அவர்களின் இணக்கமின்றி இந்திய வல்லாதிக்கத்தினாலும், கொழும்பு அரசினாலும் ஏக காலத்தில் ஒரு பக்க முனைப்பாக வலிந்தே திணிக்கப்பட்டது.**

"இந்த ஒப்பந்தத்தால் தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுளற்படும் என நான் நினைக்கவில்லை. சிங்கள இனவாதப் பூதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கி விடும் காலம் வெகுதூரத்தில் இல்லை." **– 'நாம் இந்தியவை நேசிக்கிறோம்' என்ற தலைப்பில் பிரபாகரன் அந்த சுதுமலை பிரகடனத்தில் கூறிய இந்த உண்மைதான் இன்று வரை நடந்தேறிக் கொண்டிருக்கின்றது.**

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பெறுபேறுகளை நடைமுறைப்படுத்துவதற்காக என்ற பெயரில் கொண்டு வரப்பட்டதுதான் அரசமைப்பின் 13 ஆவது திருத்தமும், அதன் கீழான மாகாண சபைகள் ரீதியான அதிகாரப் பகிர்வும் ஆட்சி முறையுமாகும்.

ஆனால், 13 ஆவது திருத்தத்தின் மூலம் அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்ட மிக முக்கியமான – கணிசமான – அதிகாரங்கள் நடைமுறையிலும் சட்டத்திலும் பகிரப்படவேயில்லை. பகிரப்பட்டவை எனக் கூறப்பட்ட பல அதிகாரங்களும் கூட காலத்துக்குக் காலம் புதிய அரசமைப்புத் திருத்தங்கள் மூலமும், புதிய சட்டங்கள் மூலமும் மீளப் பறிக்கப்பட்டு, 13 ஆவது திருத்தத்தின் கீழான அதிகாரப் பகிர்வு முறைமையே முழுமையாக நீர்த்துப் போகச் செய்யப்பட்டுவிட்டது.

"சிங்கள இனவாதப் பூதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கி விடும் காலம் வெகுதூரத்தில் இல்லை" **– என்று இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி சரியாக ஆறாவது நாளில் தமது சுதுமலைப் பிரகடன உரை மூலம் பிரபாகரன் கூறிய உண்மைதான் தொடர்ந்து நிதர்சனமாக அரங்கேறி வருகின்றமையை நாம் இன்றும் நேரில் காண்கின்றோம்.**

இலங்கை – இந்திய ஒப்பந்தம் மூலம் வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வை சிங்களப் பேரினவாதப் பூதம் விழுங்கி, அதன் சக்கையைத்தான் – எச்சத்தைத்தான் – எமக்கு விட்டு வைத்திருக்கின்றது.

அதை வைத்துக் கொண்டு தமிழர்களாகிய நாம் அல்லாடி நிற்கின்றமையை அந்த ஒப்பந்தத்தின் கீழ் உறுதியாளர்களாக – பிணையாளர்களாக – ஒப்பமிட்ட இந்திய வல்லாதிக்கம் பார்த்து வாளா நிற்கின்றது.

தலைவன் பிரபாகரன் குறிப்பிட்டமைபோல சிங்களப் பேரினவாதப் பூதத்திற்கு முன்னால் இந்திய வல்லாதிக்கம் இந்த விடயத்தில் செயலிழந்து, கூனிக் குறுகி, பயனற்று நிற்கின்றது என்பதே வராலற்றுப் பெறுபேறாகும்.

அந்த ஒப்பந்தமே, இந்தப் பிராந்தியத்தில் தனது மேலாண்மையை நிலைநிறுத்தும் பெரும் இராஜதந்திரம் என்று கற்பனை பண்ணிக் கொண்டு அதில் இறங்கிய புதுடில்லி, தனது சாணக்கியத்திலும் தோல்வியுற்று, இராணுவ மேலாதிக்கத்தையும் பரிகசிக்கும் நிலைக்குத் தாழ்த்திக் கொண்டு அவமே – அவமானமே – உருவாக இலங்கையில் இருந்து நடையைக் கட்ட வேண்டியதாயிற்று என்பதுதான் சரித்திரப் பதிவாகியுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் பெயரில் இலங்கையை 'அமைதிப் படை' என்ற பெயரில் ஆக்கிரமித்த பாரதம், பெரும் அவமானத்துடன் இங்கிருந்து திரும்ப வேண்டியதாயிற்று. ஆயிரத்து ஐந்நூறுக்கும் அதிகமான தனது படையினரைப் பறிகொடுத்து, ஐயாயிரத்துக்கும் அதிகமானோரைக் கயமடைய வைத்து (அவர்களில் பலரை நிரந்தர ஊனமுடையவர்களாக்கி) பெரும் இழப்போடு இந்தியப்படைகள் இலங்கை மண்ணை விட்டு வெளியேறியபோது, அது, பாரதம் சந்தித்த மிகப்பெரிய இராஜதந்திர – புலனாய்வுப் பின்னடைவாகக் கருதப்பட்டது.

அதன் பின்னரும் கூட, இப்போது வரை, ஒப்பந்த வாசகங்களை நடைமுறைப்படுத்தத் தவறி, அதற்கு மாறான ஏற்பாடுகளை கொழும்பு சிங்கள ஆட்சிப் பீடம் முன்னெடுப்பதைப் பார்த்திருப்பதன் மூலம் புதுடில்லியின் பின்னடைவு இலங்கை விடயத்தில் மென்மேலும் மோசமடைந்து வருகின்றது என்பதுதான் உண்மை.

வவுனியாவில் பத்துக் குளங்களில் நன்னீர் மீன்பிடித் தொழிலில் மீனவர்கள்

வவுனியா, ஜூலை 30

வவுனியா மாவட்டத்தில் 10 குளங்களில் நன்னீர் மீன்பிடி இடம்பெறுகிறது என்று தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி நிசாந்தன் யோகநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட நன்னீர் மீன்பிடி தொடர்பில் கேட்ட போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியா மாவட்டத்தில் 719 குளங்கள் இருக்கன்றன எனக் கூறுகின்ற போதும் 10 குளங்களில் மாத்திரமே பதிவு செய்யப்பட்ட நிலையில் நன்னீர் மீன்பிடி இடம்பெறுகின்றது. இதில் 14 மீன்பிடிச் சங்கங்களைச் சேர்ந்த எழுநூற்று 42 பேர் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

இன்னும் பல குளங்களில் நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்க முயற்சிகள் இடம்பெறுகின்ற போதும் ஆர்வம் செலுத்துவோர் தொகை குறைவாகவுள்ளது. தற்போது சந்தையில் நன்னீர் மீன்களுக்கும், நன்னீர் மீன் கருவாடு என்பவற்றுக்கும் கேள்வி இருக்கின்ற போதும் உற்பத்தி குறைவாக காணப்படுகின்றது எனத் தெரிவித்தார். (க – 100)

மண்முனைப்பற்று புதிய பிரதேச செயலக கட்டடம் பிரதமரின் தலைமையில் பொதுமக்களிடம் கையளிப்பு

மண்முனைப்பற்று மற்றும் ஏறாவூர் நகரத்தில் நிர்மாணிக்கப்பட்ட பிரதேச செயலக அலுவலகத்திற்கான புதிய கட்டடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்றுக் காலை பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது

மாவட்டச் செயலர் மா.உதயகுமார் தலைமையில்நடைபெற்ற நிகழ்வில்உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன, கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகல்லாகம, இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 6 கோடி 79 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. வாகனத் தரிப்பிட வசதியையும் இது கொண்டமைந்துள்ளது.

முழு வசதிகளுடனான கேட்போர் கூடமொன்றும் இந்தக் கட்டடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கட்டடம் மற்றும் பணியாளர்களுக்குத் தேவையான உபகரணங்கள் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வழங்கப்படவுள்ளன.

கத்திக்குத்திற்கு இலக்கி ஒருவர் உயிரிழப்பு !

திருகோணமலை – தம்பலகாமம் பகுதியில் கத்திக்குத்திற்கு இலக்காகி திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நபரொருவர் நேற்று காலை உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் தம்பலகாமம், புதுக்குடியிருப்புபகுதியைசேர்ந்த கணபதிப்பிள்ளை காளிராசா (54 வயது) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வாக்குவாதம், கைகலப்பாக மாறியதையடுத்து கணபதிப் பிள்ளை காளிராசாவை, அவரது மனைவியின் சகோதரர் கத்தியால் குத்தியுள்ளார் என ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

இந்த நிலையில் உயிரிழந்தவரின் சடலம்திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சட்ட வைத்திய பரிசோதனையின் பின்னர் அது உறவி னர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இதேவேளை கத்தியால் குத்திய சந்தேகநபரைத் தாம் கைது செய்துள்ளனர் எனவும், மேலதிக விசாரணைகளின்பின்அவரை கந்தளாய் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த அரசின் தவறுகள் மறையும் அளவுக்கு இந்த அரசின் தவறுகள் என்கின்றார் ரத்ன தேரர்!

கொழும்பு, ஜூலை 30

கடந்த அரசு செய்த அதே தவறுகளைத் தான் இந்த அரசும் செய்து கொண்டிருக்கிறது. கடந்த அரசு செய்த தவறுகளை மறைத்து விடும் அளவுக்கு இந்த அரசு தவறுகளை செய்துள்ளது என்று அத்துரலிய ரத்ன தேரர் குற்றம்சாட்டியுள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு, தேசிய சபை யொன்றை அமைத்து அதில் சகலதரப்பினரையும்உள்ளடக்கி கலந்துரையாடல்கள் மூலம் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் எனவும் தேரர் வழிகாட்டலை முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பதவியிலிருந்து நீங்குவது தொடர்பான தீர்மானத்தை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை அவர் கூறியுள்ளார்.

அடுத்த மாதம் முதல் கைத்தொலைபேசிகளை செயலிழக்கச் செய்ய திட்டம்!

கைத்தொலைபேசி உள்ளிட்ட தொடர்பாடல் இலத்திரனியல் சாதனங்களின் செயற்பாட்டை செயலிழக்கச் செய்யும் முறைமை அடுத்த மாதம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை இடம்பெறும் மண்டபத்திலும், அதனை அண்மித்த பகுதிகளிலும்கைத்தொலைபேசி உள்ளிட்ட தொடர்பாடல் இலத்திரனியல் சாதனங்களின் செயற்பாட்டை செயலிழக்கச் செய்யும் முறைமை அடுத்த மாதம் இடம் பெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை காலத்தில் நடைமுறைப்படுத்த பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித் இதனைத் தெரிவித்தார்.

இதற்காக இராணுவ சமிக்ஞைப் படைப் பிரிவினதும், தொலைத்தொடர்புகள்ஒழுங்குப்படுத்தல்ஆணைக்குழுவினதும் ஒத்துழைப்பை பெற எதிர்ப்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாளை

31.07.2018
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம் : சதயம் மு.ப 8.27 வரை
திதி : திருதீயை காலை 7.13
சுபநேரம் :10.33 – 12.03 வரை
இராகுகாலம் : 8.03 – 4.33 வரை

புதிய அரசமைப்பு வருவது சாத்தியமற்றதாகவே தென்படுகின்றது என்கிறார் டிலான் பெரேரா எம்.பி.

கொழும்பு, ஜூலை 30

புதிய அரசமைப்பு வருவது சாத்தியமற்றதாகவே தென்படுகின்றது. இனப்பிரச்சினைக்கான அதிகாரப் பகிர்வு, தேர்தல் முறைமை மாற்றம் ஆகியவற்றைத் தனித்தனி யோசனைகளாகச் சமர்ப்பித்து, மூன்றிலி ரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதே பொருத்தமாக அமையும் என்று நாடாளுமன்றத்தில் தனித்து இயங்கும் 16 பேர் குழுவின் உறுப்பினர் டிலான்பெரேராதெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போதைய நிலைமையைப் பார்க்கும் போது புதிய அரசமைப்பு வருமா என்பது கேள்விக்குறியே. இந்த இடத்தில் அமைச்சர் மனோ கணேசன் யதார்த்தமான கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.

அரசமைப்பைக் கொண்டு வருவது சாத்தியமற்றிருப்பதால் அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென கூறியிருக்கின்றார்.

அதனையே நாங்களும் கூறுகின்றோம். புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதை ஒரு பக்கம் வைத்து விட்டு இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தையும் தேர்தல் முறை மாற்றத்தையும் ஒரு யோசனையாக கொண்டு வந்து அதனை அரசமைப்புத் திருத்தமாக நிறைவேற்றிக் கொள்வதே பொருத்தமாக அமையும்.

வழிநடத்தல் குழு இது தொடர்பில் சிந்திக்க வேண்டியது அவசியமாகிறது. அதிகாரப் பகிர்வுக்கான திட்டத்தையும் தேர்தல் முறை மாற்றத்தையும் இணைத்து அரசமைப்புத் திருத்தமாக வழிநடத்தல் குழு முன் வைக்க வேண்டும்.

அரசமைப்புத் திருத்தத்தை முன் வைத்தால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றுவதற்கு ஆதரவு வழங்க நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

தற்போதைய அரசியல் சூழலில் இதுவே சாதகமாக இருக்கிறது. அதனைத் தவிர்த்து புதிய அரசமைப்பைக் கொண்டு வர முயற்சிப்பது பயன் தருமா என்பது கேள்விக்குறியே.

தற்போதைய ஆட்சிக் காலத்துக்குள்ளேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்றால் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தையும் தேர்தல் முறை மாற்றத்தையும் அரசமைப்பின் திருத்தமாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தென்கிழக்கு பல்கலை துணைவேந்தர் பதவி; போட்டியில் பேராசிரியர் நாஜீம் முதலிடம்

கொழும்பு, ஜூலை 30

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கான வாக்கெடுப்பில் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம். நாஜீம் 13 வாக்குகள் பெற்று முதலாமிடத்துக்கு தெரிவாகியுள்ளார் என்றும் இறுதித் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கல்கிஸையில் உள்ள கல்வி வளநிலையத்தில் நேற்றுமுன்தினம் பல்கலைக்கழகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரி உமா குமாரசாமி தலைமையில் வாக்கெடுப்பு இடம் பெற்றது. வாக்கெடுப்பில் 19 பேரவை உறுப்பினர் கலந்து கொண்டனர்.

துணைவேந்தர் பதவிக்காக போட்டியிட்ட கலாநிதி றமீஸ் அபூபக்கர் 11 வாக்குகளையும், கலாநிதி ரஸ்மி ஆதம்பாவா 10 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

இம்முறை துணைவேந்தர் பதவிக்காக 21 பேர் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் இரண்டு பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

ஏனைய 19 பேர் துணைவேந்தர் தேர்வுக்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

இருப்பினும், நேற்று முன்தினம் நடைபெற்ற வாக்கெடுப்பு மற்றும் தேர்வுக்கான போட்டி என்பவற்றில் 10 பேர்மாத்திரம்கலந்துகொண்டிருந்தனர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இந்த தேர்தல் முடிவுகள் பல்கலைக்கழக பேரவையினால் உயர் கல்வியமைச்சர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோரின் சிபாரிசுகளுடன் இறுதி முடிவெடுப்பதற்காக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சுங்க அதிகாரிகளை தாக்கிய குவைத் தம்பதியர் பிணையில் விடுதலை

கொழும்பு, ஜூலை 30

கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்க அதிகாரிகள் 5 பேரை தாக்கிய குவைத் நாட்டு தம்பதியர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அதிகாரிகளை தாக்கிய குற்றச்சாட்டில் இந்த தம்பதியர், நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

தலா ஒரு லட்சம் ரூபா சரீர பிணையில் இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்ட போதிலும், மீண்டும் இன்றைய தினம் அவர்களை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிடப் பட்டுள்ளது.

இந்த தம்பதியினால் தாக்குதலுக்குள்ளான பெண் அதிகாரிகள் உட்பட 5 அதிகாரிகள் இன்னமும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த வெள்ளிக் கிழமை தங்கள் நாயை இலங்கைக்கு கொண்டு வந்தமை தொடர்பில் ஏற்பட்ட முரண்பாட்டில் இந்த தாக்குதல் சம்பவம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பழ வகை மற்றும் காய்கறி அறுவடைகளை உலர்த்தி வைப்பதற்கான திட்டம்!

கொழும்பு, ஜூலை 30

மேலதிகமாக கிடைக்கப் பெறும் பழ வகை மற்றும் காய்கறி அறுவடை காலங்களில் அவற்றை உலர்த்தி வைப்பதற்கான வேலைத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

லபுதுவ விவசாய பண்ணையில் தெற்கு மாகாண விவசாய நவோத என்ற கண்காட்சியை நேற்று முன்தினம் காலை விவசாயத் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் உரையாற்றுகையில் அறுவடைகளை உலர்த்தி வைப்பதற்கான வேலைத்திட்டம் திட்டம் குறித்த தகவலை தெரிவித்தார்.

நாட்டில் இளம் சமூகத்தினரில் ஐந்து சதவீதமானவர்கள் விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அமைச்சர் கூறினார். இளை ஞர்களை விவசாய துறையில் ஈடுபடுத்து வதற்கான வேலைத்திட்டம் ஒன்று தனியார் துறையினரின் பங்களிப்புடன் மட்டக்களப்பில்ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகஅமைச்சர் அங்கு மேலும் தெரிவித்தார்.

தரம் ஒன்றுக்கு மாணவர்களை இணைப்பதற்கான நேர்முகப் பரீட்சை

கொழும்பு, ஜூலை 30

அடுத்த வருடம் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கானநேர்முக பரீட்சை அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

சுற்றறிக்கைக்கு அமைவாக நேர்முக பரீட்சைக்கான குழு நியமிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான ஆலோசனைகள் வலய கல்வி பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பப் படிவங்களை பட்டியலிடும் நடவடிக்கைகள் பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. செப்ரெம்பர் 15 ஆம் திகதியளவில் முதற்கட்ட நேர்முகப் பரீட்சை பூர்த்தி அடையும். நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப் படும் மாணவர்கள் தொடர்பான தற்காலிக பெயர் பட்டியல் செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி அளவில் பாடசாலைகளில் காட்சிப்படுத்தப் படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சை ஓக.6 இல்

இந்த வருட கல்விப் பொதுத் தராதர பத்திர உயர்தரப்பரீட்சை ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி வரை இடம் பெறவுள்ளது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

இம்முறை 321, 469 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றுகிறார்கள். இது வரை அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்கள் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைத்தளத்திற்கு சென்று தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பதிவு செய்வதன் மூலம் அனுமதி அட்டையை பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்தடை

யாழ்ப்பாணம் ஜூலை30

உயர் அழுத்த தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பரா மரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணி யிலிருந்து மாலை 5 மணி வரை –

வவுனியா பிரதேசத்தில் -

மகாமயிலங்குளம், குடாகச்சக் கொடிய, துட்டுவாகை, குடாகச்சகொடிய கல் உடைக்கும் ஆலை, பட்டானிச்சூரிலிருந்து மதவு வைத்தகுளம் வரை, மதவு வைத்த குளத்திலிருந்து Boo Oya வரை Rebco North ஈரப் பெரிய குளம் இராணுவ முகாம், Gowloom குருந்துப்பிட்டிய ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக எனக்கும் தகுதி: குமார வெல்கம!

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைமைப் பதவிக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட கூட்டு எதிர்க்கட்சியின் சகல உறுப்பினர்களும் எனது பெயரைப் பிரேரித்துள்ளார்கள். எனின், ஏன் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக எனக்கு வர முடியாது என கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

நான் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினராக உள்ளேன். மஹிந்த ராஜபக்ஷவுக்காக களத்தில் இறங்கிய முதலாவது ஸ்ரீ ல.சு.கட்சிக்காரன். எனக்கு முக்கியமான தேர்தலில் முக்கிய பதவிக்கு போட்டியிட எல்லாத் தகுதியும் உள்ளன என்றும் அவர் கூறினார்.

பதுளைப் பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தினசரி ராசி பலன் (30.07.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆடித்திங்கள் 13ஆம் நாள் திங்கட்கிழமை துவிதீயைத்திதி காலை 6.40 மணி வரை பின்னர் திரிதீயை. நட்சத்திரம்: அவிட்டம் காலை 6.32 வரை பின்னர் சதயம். சித்தயோகம் முழுவதும்.

ராகுகாலம் - காலை 7.35 மணி முதல் 9.09 மணி வரை.

சுபநேரம் - பகல் 12.04 மணி முதல் 1.34 மணி வரை.

திவசம் செய்ய வேண்டிய திதி - ஆடி மாத பூரணை,தேய்பிறை திரிதீயை.

பிறந்த நட்சத்திர வழிபாடு- சதயம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

மேஷம்

இன்பமான நாள். பொருளாதார நிலை வளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். தடைப்பட்ட காரியங்கள் கைகூடும். வியாபாரத் தொழில் வளர்ச்சியடையும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

ரிஷபம்

மத்திமமான நாள். பொருள் வரவு சுமாராக இருக்கும். வியாபாரத்தில் பல போட்டிகளால் வருமானம் குறையும். உடல் நலனில் கவனம் தேவை. சுய தொழிலில் புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும்.

மிதுனம்

ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் மன நிறைவைத் தரும். சுய தொழிலில் கவனமுடன் செயற்பட வேண்டும். பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்வார்கள். கடன் பட்ட நிலை மாறி ஆறுதல் கிடைக்கும்.

கடகம்

அலைச்சல் மிகுந்த நாள். படித்து முடித்த சிலர் தம் தகுதிக்கேற்ற வேலை தேடி அலைவார்கள். சிலர் கொடுத்த கடனை மீளப் பெறுவதற்கு அலைந்து திரிவார்கள். தொழிலாளர்கள் தொழில் வாய்ப்புக்காக அலைவார்கள்.

சிம்மம்

சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதார நிலை சுமாராக இருக்கும். குடும்பத்தில் ஓரளவு அமைதி நிலவும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். பயணத்தின் போது அவதானம் தேவை.

கன்னி

மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். கடன்கள் நிவர்த்தியாகும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

துலாம்

யோகமான நாள். பண பலம், மன பலம் அதிகரிக்கும். திருமண சுப காரியங்கள் கைகூடும். வீடு, வாகன வசதிகள் பெருகும். ஆன்மிகப் பணிகளில் ஈடுபாடு உண்டாகும். பெரிய மனிதர்களின் தொடர்பு கிட்டும்.

விருச்சிகம்

சஞ்சலம் மிகுந்த நாள். பணவரவுகளில் தடைகள் உண்டாகும். மனதில் குழப்பம், யோசனை அதிகரிக்கும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் தோன்றும். தொழில் வியாபாரத்தில் மந்த நிலை நிலவும்.

தனுசு

மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் வளமாக இருக்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொள்வது நல்லது. புதிய காணி, வீடு வாங்கும் விடயங்களில் சற்றுக் கவனம் தேவை.

மகரம்

அனுகூலமான நாள். பொருளாதாரம் திருப்தியைத் தரும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிட்டும். கடன்கள் படிப்படியாகக் குறையும். சகோதர உறவு வலுவடையும்.

கும்பம்

அதிர்ஷ்டமான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். புத்திர வழியில் மகிழ்ச்சி நிலவும். தொழில் வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும். பூர்வீகச் சொத்துக்களால் அனுகூலம் உண்டாகும்.

மீனம்

சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். பெண்களின் வாழ்க்கையில் சில சோதனைகள் ஏற்படும். உறவினர்கள் வீண் உபத்திரம் தருவார்கள்.

சந்திராஷ்டம நாள்; **புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

தூக்குத் தண்டனை வழங்குவது தொடர்பில் இறுதி தீர்மானமொன்றுக்கு அரசு வரவில்லை!

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள பிரதான சிறைக் கைதிகளுக்கு தூக்குத் தண்டனை வழங்குவது என இறுதியான தீர்மானமொன்றுக்கு அரசு இதுவரை வரவில்லை யென நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

நீதி அமைச்சர் தலதா தெரிவிப்பு

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களின் வழக்குகள் தொடர்பில் தெளிவுபடுத்திக் கொள்ளும் நடவடிக்கையை சட்ட மா அதிபர் திணைக்களம் ஊடாக முன்னெடுக்கவுள்ளோம்.

அலுகோசு நியமனம் குறித்து பிரச்சினைப்பட்டுக் கொள்ளத் தேவையில்லை. அது இருக்கின்ற ஒரு பதவி தான். தற்பொழுது அந்தப் பதவிக்கு சுயேச்சையாக செயற்படவும்சிலர்முன்வந்துள்ளனர்.

தூக்குத் தண்டனை தொடர்பில் கருத்துத் தெரி வித்தது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. இருப்பினும், இதனை நடைமுறைப்படுத்துவதற்கு பல்வேறு தகவல்கள் திரட்டப்பட வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தற்கொலைகளை தடுப்பது தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஏற்பாடு

தற்கொலைகளை தடுப்பது தொடர்பாக விசேட கலந்துரையாடல் புத்திஜீவிகள் சபையின் அங்கத்தவர்களின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்கொலை தடுப்பு சர்வதேச தினம் அடுத்த மாதம் பத்தாம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனைமுன்னிட்டுஇந்தகலந்துரையாடல் கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இலங்கை சுமித்திரோ நிறுவனம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. தற்காலை தடுப்பு தினத்தை முன்னிட்டு தமது அமைப்பு பகிரங்க சித்திரப் போட்டி ஒன்றையும் ஏற்பாடு செய்துள்ளதாக அந்த அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

தற்கொலையை தடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்என்பதேசித்திரப்போட்டியின் தொனிப்பொருளாகும். மன உளைச்சல், மன நோய் ஆகியன தற்கொலைக்கு முக்கிய காரணமாகும் என்று இவர்கள் தெரிவித்தனர்.

எவருக்கும் ஏதெனும் பிரச்சினை இருக்குமாயின் இலவசமாக ஆலோசனை வழங்குவதற்காக இலங்கை சுமித்திரோ நிறுவனம் 24 மணித்தியாலமும் தயாராக இருப்பதாக இவர்கள் தெரிவித்துள்ளனர். தற்கொலை முயற்சியைதடுப்பதுதொடர்பான தகவல்கள் மற்றும் தெளிவை ஏற்படுத்தும் நோக்கில் 2003 ஆம் ஆண்டில், தற்கொலையை தடுக்கும் சர்வதேச தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

இலங்கையில் வருடம் ஒன்றுக்கு சுமார் நான்காயிரம் பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர். வருடத்தில்தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை சுமார் மூவாயிரமாகும். இருப்பினும் இலங்கையில் வருடம் தோறும் தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை குறைத்து வருவதை காணக் கூடியதாக உள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

மன்னார் வாழ்வுதயத்தினர் நடத்திய சமாதானப் பேரணி, கண்காட்சி நிகழ்வு

மன்னார், ஜூலை 30

கறிற்றாஸ் – இலங்கையின் 50ஆவது ஆண்டு நிறைவு பொன்விழாவைமுன்னிட்டுகறிற்றாஸ் – வாழ்வுதயத்தினால் நடத்தப்பட்ட மாபெரும் சமாதான பேரணியும் கண்காட்சி நிகழ்வும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முருங்கனில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றன.

இந்நிகழ்வுகளை கறிற்றாஸ் – வாழ்வுதயத்தின் இயக்குநர் அருட்தந்தை. அன்ரன்அடிகளார் நெறிப்படுத்தியதோடு இந்தப் பேரணியை முருங்கன் பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பித்து வைத்தார்.

இப் பேரணியின் தொடக்கத்தில் சர்வ மத வழிபாடுகள் சர்வ மத தலைவர்களால் நடத் தப்பட்டமையுடன் முருங்கன் பஸ் தரிப்பிட நிலையத்திற்கு அருகில் சமாதானம் நல்லிணக்கத்திற்கு அடையாளமாக பொறிக்கப்பட்ட சமாதான நினைவுப் பலகையை இந் நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்துகொண்ட மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஏ. அன்ரனி விக்டர் சோசை அடிகளார் ,மன்னார் அரசாங்க அதிபார் மோகன்ராஸ் ஆகியோர் திரை நீக்கம் செய்து வைத்தனர்.

பின்னார் பேரணி பஸ்தரிப்பு நிலையத்தில்இருந்து முருங்கன் மகாவித்தியாலய வளாகத்தை சென்றடைந்தது.

அங்கு அழைக்கப்பட்டவிருந் தினர்கள் மாலை அணிவிக்கப் பட்டு தமிழ் பாரம்பரிய வாத்தி யங்கள் முழங்க சிங்கள பாரம் பரிய கண்டி நடன அணி வகுப்புடன் பாடசாலை வளாக அரங்கிற்கு அழைத்துச் செல் லப்பட்டனர்.

அதனைத்தொடார்ந்துபிரதம அதிதியும் கறிற்றாஸ் – இலங்கை தேசிய நிலையத்தின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் அருட்சகோதரர் துசாயும் இணைந்து மிகவும் பிரமாண்டமாக அமைக்கப்பட்ட சமாதான தீபத்தை ஏற்றி வைத் தார்கள்.

தொடர்ந்து மன்னார் கறிற் ராஸ் – வாழ்வுதய இயக்குநர் அருட்பணி அன்ரன் அடிகளா ரால் வரவேற்பு உரை நிகழ்த்தப் பட்டதுடன்நிகழ்வுகள்தொடார்ந்து இடம்பெற்றன.

இந்தநிகழ்வை அனுராதபுரம் மறைமாவட்ட கறிற்றாஸ் – செத்சவிய ஸ்தாபனம் ஆகிய இணைந்து கொண்டாடியமையுடன், சுமார் 1200 இற்கும் மேற் பட்ட மக்கள் கலந்து சிறப்பித் தார்கள்.

அனுராதபுரத்திலிருந்து 300 இற்கும் மேற்பட்ட மக்கள் இதில் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது.

(இ–112)

சட்டவிரோதமாக குடியேறிய 6 லட்சம் பேரை உடனடியாக சரணடையுமாறு மலேசிய அரச உத்தரவு

கொழும்பு, ஜூலை 30

சட்டவிரோதமாகக் குடியேறிய 6 லட்சம் பேரை உடனடியாக சரணடையுமாறு மலேசிய அரசு உத்தரவிட்டுள்ளது. இதில் தமிழர்களும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவில் சட்டவிரோதமாகப் பணியாற்றும் வெளிநாட்டுத் தொழிலாளர்களைக் கண்டறியும் நடவடிக்கையை கடந்த ஜூலை 1 ஆம் திகதி முதல் மலேசிய குடியேற்றத்துறை ஆரம்பித்தது.

அதன்படி, இதுவரை 3,000 வெளிநாட்டு தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், தீவிரமாக தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.

இந்தநிலையில், சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் ஓகஸ்ட் 30இற்குள் சரணடைய வேண்டும் என்றும் அவர்களை பணியமர்த்தும் நிறுவனங்களின் பொறுப்பாளர்களும் கைது செய்யப்படுவார்கள் என்றும் மலேசிய அரசு எச்சரித்துள்ளது.

தானாக முன்வந்து சரணடையும் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் சொந்த நாட்டுக்கே திருப்பி அனுப்பி வைக்கப்படுவர் எனக் கூறப்பட்டுள்ளது

மிளகாய் தூள் வீசி பணம் கொள்ளை

புளத்சிங்கள பகுதியில் தனியார் வங்கிக்கு சொந்தமான ஏ.டி.எம். இயந்திரத்தில் பணத்தை வைப்பிலிட சென்ற வங்கி உத்தியோகத்தர்கள் மீது மிளகாய் தூள் வீசி ஒரு கோடிக்கும் அதிகமான பணத்தை கொள்ளையடித்துக் கொண்டு கொள்ளையர் கள் தப்பிச் சென்றுள்ளனர் என பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் புளத்சிங்கள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்ற உறுப்பினர் வீட்டுக்கு மதுபோதையில் சென்றவர் கைது!

கொழும்பு, ஜூலை 30

மதிவெலவில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக்க பெர்னாண்டோவின் இல்லத்துக்கு மதுபோதையில் சென்ற இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணனின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் மீட்பு!

மட்டக்களப்பு, ஜூலை 30

மட்டக்களப்பு, வந்தாறுமூலை பகுதியில் வீடொன்றிலிருந்து சடலம் ஒன்று நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளது என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வச்தாறுமூலை வீசி வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 44 வயதுடைய தங்கராசா ஜீவானந்த ராசா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

சனிக்கிழமை மதிய உணவின் பின் வீட்டில் படுக்கைக அறைக்குள் நுழைந்த அவர் மாலை 5 மணிவரை வெளியில் வராதமையினால் அவரது மகளுக்கு சந்தேகம் ஏற்பட்டு கதவை உடைத்து பார்க்கும் போது அவர் உயிரிழந்து காணப்பட்டார்.

இதையடுத்து ஏறாவூர் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து ஏறாவூர் பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேதபரிசோதனைக்காக மட்டு.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

அரசு கொண்டு வந்த தேர்தல் முறையால் உள்ளூராட்சி சபைகளில் பிரச்சினைகள்

கொழும்பு, ஜூலை 30

அரசு கொண்டு வந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறை தோல்வியானது என அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தல் முறை காரணமாக உள்ளூராட்சி சபைகளில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாகாண சபைகளுக்கும் இப்படியான முறைமையை துரிதமாக அறிமுகப்படுத்தினால், நாட்டின் நிர்வாகம் சீர்குலைந்து போகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மாவனெல்லலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அதேவேளை புதிய தேர்தல் முறை சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கட்சித் தலைவர்களுக்கும் இடையில், எதிர் வரும் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

– கபீர் ஹாசிம்!

கடந்த வாரம் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இது தொடர்பான இணக்கம் காணப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஓட்டோ சாரதிகளுக்கு பயிற்சிகளை வழங்கி சுற்றுலாத்துறையில் ஒன்றிணைப்பதற்குத் திட்டம்

ஓட்டோ சாரதிகளுக்கு பயிற்சிகளை வழங்கி சுற்றுலாத்துறையில் ஒன்றிணைப்பதற்காக வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழான பயிற்சி வேலைத்திட்டம் இன்று கொழும்பு காலி முகத்திடலில் ஆரம்பமாகவிருக் கிறது என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

தொழில் பயிற்சி அதிகார சபையின் தலல்ல தேசிய மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், 120 நாள்களில் நிர்மாணத்துறையில் திறன்மிக்க சிற்பிகளை உருவாக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டப்பணிகளை ஆரம்பிக்கும் பொருட்டு இவ்வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கார் விபத்தில் இருவர் படுகாயம்

கொழும்பு, ஜூலை 30

கொழும்பில் அதிசொகுசு காரால் நேர்ந்த விபத்தில் இருவர் காயமடைந்துள்ளதுடன், பல வாகனங்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன என தெரிய வருகிறது.

புறக்கோட்டை பகுதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என கொழும்பு ஊடமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விபத்து எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பது தொடர்பில் அருகில் பொருத்தப்பட்டிருந்த சீசீரிவி கமராவில் பதிவாகியுள்ளது.

அதன்படி, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அதிசெகுசு காரை நபரொருவர் செலுத்துவதற்கு முயற்சித்துள்ளார்.

இதன்போது கார் சாரதியின் கட்டுப்பாட்டிலிருந்து விலகிய நிலையிலேயே இரு நபர்கள் மீதும், வாகனங்கள் மீதும் அது மோதியுள்ளது என காட்சிகள் பதிவாகியுள்ளன.

விபத்து சம்பவம் தொடர்பில் புறக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏரியில் மூழ்கி இளைஞர் உயிரிழப்பு

தம்புள்ளை, கண்டலம் ஏரியில் மூழ்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞனுடன் மது பானம் அருந்திய 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இளைஞனை ஏரியில் தூக்கி வீசினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 16 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தை செய்தியாக வெளியிட வேண்டாம் என கூறி ஊடகவியலாளர்களையும் இந்த இளைஞர்கள் தாக்கியுள்ளனர். அதேசமயம் அந்த குறித்த 16 பேரும் வைத்தியசாலை ஊழியர்களுடனும் மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் கொழும்பு தனியார் நிறுவனம் ஒன்றில் சேவை செய்யும் 21 வயதுடைய வெரகொட கப்புகே இசுரு ரன்திக்க என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதேசத்தில் தனியார் நிறுவனத்தில் சேவை செய்யும் ஊழியர்கள் 17 பேர் பஸ் ஒன்றில் கண்டலம் பிரதேசத்திற்கு சுற்றுலா பயணம் மேற்கொண்டுள்ளனர்.

அங்கு அவர்கள் தடை செய்யப் பட்ட இடத்தில் மதுபானம் அருந்தி விட்டு குளிப்பதற்கு சென்றுள்ளனர்.

இதன்போது இளைஞர்கள் இணைந்து ஓர் இளைஞரை ஏரியில் தூக்கி வீசியுள்ளனர். இதனால் அந்த இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தநிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மின்கம்பத்துடன் வாகனம் மோதியதில் ஒருவர் படுகாயம்

ஏறாவூரில் மின்சார சபையினரின் திருத்தப்பணி வாகனம் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் மீராகேணி, முஸ்லிம் பாடசாலைக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் இந்த வாகனமும் பலத்த சேதமடைந்துள்ளதோடு மின்கம்பம் முறிந்து வீழ்ந்ததால் வீதியருகிலிருந்த கடைகளும் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவத்தில் ஒருவர் படுகாமமைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம்பற்றி ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

(க)

காலைக்கதிர் Kalaikkathir

- துரைஅகரன்

2,700 ஆண்டுகளுக்கு முன்பே யாழ். கோட்டையில் மக்கள் வாழ்ந்தமைக்கான உறுதியான சான்றுகள்!

யாழ்ப்பாணம் கோட்டைக்குள் உள்ள சிறைச்சாலைக்கு அண்மையாக நடத்தப்பட்ட அகழ்வு ஆய்வுப் பணிகளில் அங்கு 2 ஆயிரத்து 700 ஆண்டுகளுக்கு முன்னர், ஆதி இரும்புக் கால மக்கள் வாழ்ந்ததற்கான நம்பகரமான உறுதியான சான்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

–இவ்வாறு தொல்லியல் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் தெரிவித்தார்.

கோட்டைப் பகுதியில் வாழ்ந்த மக்கள், தென்கிழக்கு ஆசியா, மேற்கு ஆசியா மற்றும் ஆபிரிக்கா நாடுகளுடன் வணிக உறவு கொண்டிருந்தமையையும் அதன் முக்கிய நிலையமாக யாழ்ப்பாணம் கோட்டைப் பிரதேசம் அமைந்திருந்தது என்பதையும் உறுதிப்படுத்தும் சான்றுகளும் உள்ளன என்று அவர் சுட்டிக் காட்டினார்.

யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் கடந்த 2 வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட அகழ்வு ஆராய்ச்சிப் பணிகள் தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் தொல்பொருள் திணைக்களத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தலை வருமாறு–

2017ஆம் ஆண்டு போருக்குப் பிந்திய தொல்லியல் ஆய்வுப் பணிகள் யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்த ஒல்லாந்தர் காலத் தேவாலயம் அழிவடைந்தது. அந்த ஆலயத்தின் வரலாற்றுத் தொன்மையை ஆராய்வது மற்றும் அதனை மீள் உருவாக்கம் செய்வதே இந்த போருக்குப் பிந்திய தொல்லியல் ஆய்வுப் பணியின் நோக்கமாகும்.

தொல்லியல் பேராசிரியர் புஷ்பரட்ணம் தகவல்

போர்த்துக்கேயர் வருகைக்கு முன்பே வணிக மையமாக கோட்டை

அத்துடன், ஐரோப்பியர் போர்த்துக்கீசர் வருகைக்கு முன்னர் கோட்டைப் பகுதி எவ்வாறு இருந்தது என்பதை அறிவதும் இந்த ஆய்வின் முக்கிய கருப்பொருளாகும். ஒல்லாந்தர் கால கிறிஸ்தவ ஆலயத்தை கண்டறியும் சில அகழ்வு ஆராய்ச்சிப் பணிகள் கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்டன. ஆலயத்தின் அத்திவாரம், சுவர் மற்றும் கட்டடப் பகுதிகள் கண்டறியப்பட்டன. அதே காலப் பகுதியில் 2 – 3 இடங்களில் அகழ்வு செய்யப்பட்டன.

அதில் சிறைச்சாலைக்கு அண்மையிலே ஓர் அகழ்வுக் குழி ஒன்று ஏற்படுத்தப்பட்டு, இயற்கை மண்வரை ஆய்வு செய்யப்பட்டது. 9 கலாசார மண் அடுக்குகள் அதில் கண்டறியப்பட்டன. யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியில் தென்னிந்தியா அல்லது தமிழகம், கந்த ரோடை, அநுராதபுரம், பூநகரி மற்றும் சாட்டி போன்ற இடங்களில் இருந்ததை ஒத்த ஆதி இரும்புக்கால மக்கள் வாழ்ந்தமைக்கான நம்பகரமான உறுதியான சான்று கிடைத்துள்ளது.

2 ஆயிரத்து 700 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆதி இரும்புக்கால மக்கள் வாழ்ந்தார்கள் என்பது உறுதியாகிறது. இரண்டாவதாக, இங்கு வாழ்ந்த மக்கள் தென்கிழக்கு ஆசியா, மேற்கு ஆசியா, கிழக்கு ஆசியா மற்றும் ஆபிரிக்க நாடுகளுடன் வணிக உறவைக் கொண்டிருந்தமைக்கும் அந்த வணிகத்தில் யாழ்ப்பாணக் கோட்டைப் பிரதேசம் முக்கிய வணிக மையமாக இருந்தமைக்கும் சான்றுகள் கிடைத்தன.

இந்த நிலையில் அண்மையில் கோட்டையில் ஹெலிகள் வந்து இறங்கி தங்குகின்ற கட்டடப் பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டன. இம்முறை அகழ்வு ஆராய்ச்சிப் பணிகளில் நவீன கருவிகள் கொண்டு ஸ்கான் செய்து, நிலத்துக்கு அடியில் என்ன என்ன இருக்கின்றன என்று பார்க்கப்பட்டது. கோட்டைக்குகீழ் 6–7 அடி ஆழத்தில் பண்டைய கட்டடப் பகுதிகள், கட்டட இடிபாடுகள், கிணறுகள் என்பன கண்டறியப்பட்டன.

உலங்கு வானூர்தி வந்து தரையிறங்க 20ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட கட்டடப் பகுதிக்கு அருகில் ஆய்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. ஒல்லாந்தார் கால கிறிஸ்தவ ஆலயம் அழிவடைந்ததுக்கு அண்மையான பகுதியான அந்த இடத்தில், 16ஆம் நூற்றாண்டுக்கு முன் பிருந்த சில தொல்பொருள் சான்றுகள் கிடைத்தன. அத்துடன், போர்த்துக்கேயர் கால கட்டட அத்திபாரம் கண்டுபிடிக்கப்பட்டது.

போர்த்துக்கேயர் கால கட்டடங்களை இடித்து அந்தக் கற்களைக் கொண்டே கோட்டையை அமைத்ததற்கும் கிறிஸ்தவ ஆலயங்கள் அமைக்கப்பட்டதற்கும் இதன் போது ஆதாரங்கள் கிடைத்தன. அந்த இடத்தில் போர்த்துக்கேயர் கால போர் வீரர்களின் கல்லறைகள் இருந்திருக்க வேண்டும். அந்தக் கல்லறைகளின் கற் பலகைகள் மாற்றப்பட்டு, அவை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. அதன் விளைவாக மனித எலும்பு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அது போர்த்துக்கேயர் கால மட்பாண்டங்களுடன் மீட்கப்பட்டன. எனவே அது போர்த்துக்கேயர் காலம் அல்லது அதுக்கு முந்திய காலப்பகுதியை உடையதாக இருக்கலாம். அந்த எலும்பு ஆய்வுக்கு அனுப்பப்படும். எலும்பு மீட்கப்பட்ட இடம் பாதுகாக்கப்பட்டு, அதற்கு அருகிலே ஆய்வுப் பணிகள் இடம்பெறுகின்றன.

இவ்வாறு மீட்கப்பட்ட தொல்பொருள்கள், கோட்டைக்குள் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை மக்கள் பார்வையிட வேண்டும்.– என்றார். *

சிறந்த ஊடகவியலாளருக்கான விருது

இலங்கை பத்திரிகைஸ்தாபனத்தின் பங்களிப்புடன் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் நடத்தும் 19 ஆவது சிறந்த ஊடகவியளாளர்களுக்கானவிருதுவழங்கும்நிகழ்வு நாளை 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மவுண்ட்லெவனியா ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

நாளை நடைபெறும் நிகழ்வில் வாழ்நாள் சாதனையாளர் ஜவருக்கு விருதுகள் வழங்கப்படும். அவர்களில் தமிழ்ப் பத்திரிகைகளின் ஊடகவியலாளர்களான சின்னையா கணேசன், ஏ.எல்.எம்.சலீம் ஆகியோரும் அடங்குகின்றனர்.

40 ஆண்டுகளுக்கு மேல் இன்னும் ஊடக வானில் பிரகாசிக்கும் கணேசன்

சின்னையா கணேசன் இலங்கைத் தமிழ் ஊடகப் பரப்பில் மிகவும் மூத்த பத்தரிகையாளர். நாற்பது வருடங்களுக்கு மேல் பல்வேறு தர நிலைகளில் பணியாற்றி வருபவர்.

'சுயாதீன பத்திரிகை சமாசம்' வெளியிட்ட 'தவஸ', 'ரிவிரஸ', 'தசன்',

எஸ்.கணேசன்

'தவீக்கென்ட்' பத்திரிகைகளின் சகோதரப் பத்திரிகையான 'தினபதி', 'சிந்தாமணி' ஏடுகளின் இரத்தினபுரி பிராந்திய செய்தியாளராக 1977 இல் தமது ஊடகப் பணியை ஆரம்பித்தார் கணேசன்.

1987 இல் அந்தப் பத்திரிகையின் கொழும்பு அலுவலகச் செய்தியாளராக நியமிக்கப்பட்டார்.

1989 இல் 'லேக்ஹவுஸ்' பத்திரிகை நிறுவனத்தின் 'பிராந்திய செய்தி ஆசிரியராக இணைந்த அவர் நாடாளுமன்றப் செய்திகளையும் துடிப்புடன் சேகரிக்கும் இளம் ஊடகவியலாளராக விளங்கினார்.

2012 இல் 'சுடர் ஒளி' பத்திரிகையில் செய்தி ஆசிரியராக இணைந்த அவர், பின்னர் வீரகேசரி வார வெளியீட்டில் செய்தியாளராகப் இணைந்து தற்போது அதில் பணியாற்றி வருகின்றார்.

மும்மொழி ஆளுமை மிக்க கணேசன் தமிழில் மணிபிரவாக எழுந்து நடையில் செய்திகளைத் தொகுத்து தரவல்லவர்.

நாடாளுமன்ற மற்றும் பொதுக் கூட்டச் செய்திகள், பத்திரிகையாளர் மாநாடு பற்றிய தகவல்களை உள்ளது உள்ளபடி – அதேசமயம் மனதைத் தொடும் வகையில் – வரைந்து சமர்ப்பிப்பதில் கணேசனின் பாணி தனித்துவமானது.

இலங்கை ஊடகப்பரப்பில் மும்மொழி ஊடகவியலாளர்களுடன் சரளமாகவும் நெருக்கமாகவும் பழகும் கணேசன் நெருக்கடி காலங்களில் ஊடக சுதந்திரத்துக்காக அர்ப்பணிப்புடனும், துணிச்சலுடனும் பணியாற்றிய தலைநகர ஊடகவியலாளர்கள் ஒரு சிலரில் மிக முக்கியமானவர்.

ஊடக சுதந்திரத்துக்காக குரல் எழுப்பிய பல்வேறு ஊடக அமைப்புக்களில் முன்னின்று தைரியத்துடன் உழைத்தவர் அவர்.

பொன் விழா கண்ட கிழக்கில் புகழ் பெற்ற ஊடகர் சலீம்

இலங்கையின் மூத்த ஊடகவியலாளர்களுள் ஒருவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான நிந்தவூரைச் சேர்ந்த கலாபூஷணம் ஏ.எல்.எம். சலீம், முழு நேர ஊடகவியலாளராக ஐம்பது வருடங்களைப் பூர்த்தி செய்து இன்றும் பணியைத் தொடர்கின்றார்.

கிழக்கில் நிந்தவூரில் பிறந்து வளர்ந்த சலீம் 1966ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஊடகத்துறையில் காலடி பதித்தார். இலங்கையின் தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் என வர்ணிக்கப்படும் அமரர் எஸ்.டி.சிவநாயகம் போன்ற முன்னணி ஊடகவியலாளர்களால் புடம் போடப்பட்டவர்.

சலீம் தேசிய பத்திரிகைகளில் மட்டுமன்றி, வடபுலத்து தமிழ்ப் பத்திரிகைகளிலும் பணியாற்றியுள்ளார்.

மருதமுனை மண்ணில் 1966 ஆம் ஆண்டு ஜூலை 02ஆம் திகதி கொண்டாடப்பட்ட முதலாவது இஸ்லாமிய் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டின் 50 ஆவது வருட நிறைவை வரலாற்றில் பதிக்கும் பொன் விழா நிகழ்வில், வாழ் நாளில் 50வருடங்களை ஊடகத்துறைக்காக அர்ப்பணித்து தடம் பதித்த் சலீமின் ஊடகப் பணியை வாழ்த்தி, பாராட்டி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பொன் விழா விருது வழங்கி கௌரவித்தமை இவரது 50 வருடசேவைக்கு கிடைத்த பெரும் பேறாகும்.

ஊடக உலகில் வலம் வரும் சலீம்

அவர்களுக்கு அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனமும், அதன் தலைவர் கலாபூஷணம் மீராஎஸ், இஸ்ஸதீன் அவர்களினதும், உறுப்பினர்களதும் அயராத முயற்சியின் பலனாக வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை வரலாறாகும்.

அரசமைப்புச் சீர்திருத்தம்

ஒரு வடபுலத்துப் பார்வை

அண்மையில் பேராதனைப் பல்கலைக்கழக மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் ஆராய்ச்சி சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தொடரில் எம்.பி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் ஆற்றிய உரையின் முதல் பகுதி இது.

"அரசமைப்புத் திருத்தம் – ஒரு வடபுலக் கண்ணோட்டம்" என்ற தலைப்பில் இந்த உரையை அவர் ஆங்கிலத்தில் ஆற்றினார். அதன் தமிழ் மொழிபெயர்ப்பு இது.

பேராதனைப் பல்கலைக் கழக உபவேந்தர் அவர்களே, கலைப் பீடத் தலைவர் அவர்களே! மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளர் சங்கைக்குரிய பேராசிரியர் ஞானாநந்த அவர்களே! மகாசங்க உறுப்பினர்களே, என் இனிய நண்பர்களே!

எமது நாட்டிற்கு மிகவும் முக்கியமானவையாக அமையும் விடயங்களை ஆராயும் உங்களுடைய பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் ஆராய்ச்சிச் சங்கத் தொடக்க கூட்டமாகிய இதுபோன்றதொரு மிக முக்கியமான கூட்டத்தில் சிறப்புரை ஆற்றுவதற்காக அழைக்கப்பட்டுள்ளமையையிட்டு மகிழ்ச்சியும் பேருவகையும் அடைகிறேன். நான் இக்குறிப்பிட்ட தருணத்தில் மாத்திரமின்றி, நீண்ட காலமாகவே இந்த நாட்டில் நடைபெற்ற பெரும்பாலான போராட்டங்களுக்கு இப் பிரச்சினைகள் காரணமாக இருந்து வருகின்றன.

எனவே, இத்துறைகளி லான கல்விசார் ஆராய்ச்சிகள் ஏறத்தாழ 100 வருடங்களாக நாம் இரு துருவங்களாக இருக்கும் நிலையைக் குறைப்பதற்கு பங்களிப்புச் செய்யும் என்று நான் எண்ணுகின்றேன்.

100 வருடங்கள் என்று நான் ஏன் கூறுகின்றேன்? ஏனெனில் எனக்குத் தரப்பட்டுள்ள தலைப்பு 'அரசமைப்புச் சீர்திருத்தங்கள் மற்றும் ஒரு வடபுல கண்ணோட்டத்தில்

அரசமைப்புத் தயாரித்தல் செயன்முறை' பற்றியதாகும். ஒரு வடபுல கண்ணோட்டத்திலிருந்து பார்க்கின்றபோது, இந் நடைமுறை ஒரு நூற்றாண்டை எட்டுகிறது என்று எண்ணுகின்றேன். நாங்கள் இன்னமும் அதற்குத் தீர்வு காணவில்லை.

இந்நடைமுறை தொடங்கிய 1900 களின் ஆரம்ப காலப்பகுதிக்கு, சுதந்திரத்தின்போது மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு அல்லது இப்பிரித்தானிய காலனித்துவ நாட்டிற்கு வேறு வகையான அந்தஸ்து ஆராயப்பட்டமை மீது – இலங்கை தேசிய காங்கிரஸ் அதனை பின்பற்றியது மீது – எமது கவனத்தைத் திருப்புகிறேன்.

ஆனால் 1911 ஆம் ஆண்டில்தான் சேர் பொன்னம்பலம் அருணாசலம் தமிழர் மகாசபை என்று அழைக்கப்பட்ட தனி இயக்கமொன்றைத் தொடங்கினார். எனவே அங்குதான் இந்த நாட்டின் அரசியல் சமூகத்தில் ஒரு பிரிவு ஆரம்பமானது.

இந்தத் தீவு எப்போதும் தனியொரு அலகாக இருந்ததில்லை. 1833 இல் கோல்புரூக் கெமரோன் சீர்திருத்த ஆலோசனைகளுக்குப் பின்னர்தான் நிர்வாக வசதிக்காக இத்தீவு தனியொரு நிர்வாக அலகாக மாற்றப்பட்டது. 1833 வரை அது மூன்று வெவ்வேறு அலகுகளாக நிர்வகிக்கப்பட்டது.

1815 ஆம் ஆண்டு இறுதியாக கண்டி பிரித்தானியருக்கு ஒப்படைக்கப்பட்டதென்பதை கண்டியில் உள்ள நீங்கள் அறிவீர்கள். அதற்கு முன்னர், மற்ற இரண்டு அரசுகளும் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு காலனித்துவ ஆக்கிரமிப்பாளர்களிடம் சரணடைந்தன.

எனினும், 1815 ஆம் ஆண்டு பிரித்தானியர் முழு நாட்டையும் கைப்பற்றியபின்னர் இத்தீவு ஒரே அலகாக நிர்வகிக்கப்படவேண்டுமென பிரித்தானியரினால் தீர்மானிக்கப்பட்டது. அவர்கள் வேறு விதமான தீர்மானமொன்றை மேற்கொண்டிருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று நான் அடிக்கடி எண்ணியதுண்டு. அவர்கள் இரண்டு வேறுபட்ட தீர்மானங்களை எடுத்திருக்கலாம். ஒன்று – மூன்று தனித்தனி அலகுகளாக தொடர்வதற்கு அவர்கள் தீர்மானித்திருக்கலாம்.

அல்லது இலங்கைத் தீவை இந்தியப் பேரரசின் ஒரு பகுதியாக அவர்கள் இணைத்திருக்கலாம். இரண்டும் சாத்தியமாகி இருக்கலாம்.

இத்தீவை இந்தியாவின் ஓர் அங்கமாக அவர்கள் இணைத்திருந்தால் – நான் அவ்வாறு கூறுவது ஏனெனில், அக்காலப் பகுதியில் இந்தியாவில் நலனைக் கொண்டிருந்தது அதே பிரித்தானிய கம்பனிதான் – கிழக்கிந்திய கம்பனி.

இன்று இந்தியாவின் வரை படத்தை நீங்கள் பார்ப்பீர்களாயின், அங்கு இரண்டு தீவுத்தெகுதிகள்உள்ளன – இலங்கைகையை விட இந்தியாவின் கரைக்கு அப்பால் மிகமிகத் தொலைவில் உள்ள நிக்கோபார் மற்றும் அந்தமான் தீவுகள். எனினும் அவை இரண்டும் இந்தியாவின் பகுதிகளாக உள்ளன. ஏன் ஏனெனில், பிரித்தானியர் அவற்றை இந்தியாவின் பகுதிகளாக ஆளுவதற்குத் தீர்மானித்தனர்.

ஆனால் இலங்கையை ஒரு தனி அலகாக ஆளுவதற்கு அவர்கள் தீர்மானித்தார்கள். எனவே இத்தீர்மானம் எந்த வழியிலும் சென்றிருக்கலாம் அல்லது கோல்புரூக் கெமரோன் ஆலோசனை இல்லாதிருந்தால், அவர்கள் இலங்கை மூன்று தனித்தனி அலகுகளாக தொடர்ந்து ஆண்டிருக்கலாம்.

எனவே, தற்காலத்தில் நாங்கள் ஒரே அலகாக மாறியிருப்பது வரலாற்றின் ஒரு தற்செயல் நிகழ்வு அல்லது சென். ஜேம்ஸ் மன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு தீர்மானத்தின் விளைவு ஆகும்.

அது அவ்வாறிருக்க, 1926 ஆம் ஆண்டு இலங்கைக்கான ஓர் அரசமைப்பு கலந்துரையாடப்பட்டபோது, அதற்கு ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்திலிருந்து நாடு திரும்பிய எஸ்.டப்ளியு. ஆர். டீ. பண்டாரநாயக்க அவர்களிடமிருந்து ஒரு புதிய கருத்து கிடைத்தது. அப் போது அவர் இலங் கைக்கு மிகச் சிறந்த அர சமைப்பு முறை ஒரு சமஷ்டி ஏற் பாடு தான் என்று வாதிட்டு 'சிலோன் மோர்னிங் லீடர்' பத்திரிகைக்கு 6 கடிதங்கள் எழுதினார். இவ்வாறு வெளிப்படையாகசமஷ்டிஎண்ணத்தை முதலில் ஆதரித்தவர் அவர்தான். ஆறு கடிதங்கள். அந்த ஆறு கடிதங்களையும் நான் வாசித்துள்ளேன். கடைசிக் கடிதத்தில் – 5வது கடிதம் என்றுநினைக்கிறேன் – அந்த சமஷ்டி ஏற்பாடு சுவிற்ஸர்லாந்தில் நிலவும் சமஷ்டி முறையாக அமையவேண்டும் என்று அவர் கூறுகின்றார். சுவிற்ஸர்லாந்து 26 கெண்டோன்கள் அடங்கிய ஒரு கூட்டாட்சி என்பது உங்களுக்குத் தெரியும். சுவிற்ஸர்லாந்தில் வேறு எந்த சமஷ்டி ஏற்பாட்டையும்விட மிகஅதிகமாக அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன. சிலவேளை கடந்த காலங்களில் USSR அவ்வாறு இருந்திருக்கும். ஆனால் இன்று ஒரு சமஷ்டி ஏற்பாட்டில் அதிகாரம் மிக அதிக அளவில் பகிரப்பட்டிருப்பது சுவிற்ஸர்லாந்தில்தான். சுவிஸ் முறைதான் இலங்கைக்கு மிகச் சிறந்த முறை என்பதே எஸ் டப்ளியு. ஆர். டீ. பண்டாரநாயக்க அவர்களின் கருத்தாகும்.

அவர் அத்துடன் நின்றுவிடவில்லை பத்திரிகைகளுக்கு 6 கடிதங்கள் எழுதியதோடு அவர் நின்றுவிடவில்லை. நான் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து இப்போது இங்கு கண்டியில் உரையாற்றுவதுபோல, அவர் யாழ்ப்பாணம் சென்று ஓர் உரை ஆற்றினார். யாழ்ப்பாணத்திற்குச் சென்று சமஷ்டி முறையை ஆதரித்து உரையாற்றினார். 1926 இல் அவர் சமஷ்டி எண்ணத்தை யாழ்ப்பாணத்தில் விதைக்க முயன்றார். உண்மையில் யாழ்ப்பாணம் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை.

இராச்சிய சபைக்கான 1931 ஆம் ஆண்டு தேர்தலில் ஹண்டி பேரின்பநாயகம் தலைமையிலான யாழ்ப்பாண இளைஞர் பேரவை ஒரு பூரண சுய இராஜ்சியத்தை கோரியது. எங்களால் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கைக்கு பூரண சுதந்திரம். பூரண சுயராச்சியம் என்று அவர்கள் கூறி, தேர்தலை பகிஸ்கரித்தார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து ஒருவர் கூட போட்டியிடாத அளவிற்கு அவர்கள் தேர்தலைப் பகிஷ்கரித்தார்கள். யாரும் போட்டியிடுவதற்கு துணியவில்லை. எனவே யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு பிரதிநிதி இல்லாமலே இராச்சிய சபை இருந்தது.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

எனவே, எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்கவின் சமஷ்டி கருத்து 1920 களிலும் 1930 களிலும் யாழ்ப்பாணத்தில் முழுமையாக நிராகரிக்கப்பட்டது.

1931 ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழு வந்தபோது கண்டித் தலைவர்கள் இலங்கைக்கு ஒரு சமஷ்டி அரசமைப்பிற்கான கருத்தை முன்வைத்தனர் என்பது உங்களுக்குத் தெரியும். பிந்திய 1940களில் சோல்பரி ஆணைக்குழுவிலும் இக்கருத்து மீண்டும் எடுத்துரைக்கப்பட்டது. இலங்கைக்கு ஒரு சமஷ்டி அரசமைப்பைக் கோரி அப்போது கண்டிய லீக் எழுத்து கருத்துச் சமர்ப்பணமொன்றை மேற்கொண்டது. ஆனால் 1940களில் சமஷ்டி முறையே இத்தீவிற்கு மிகப் பொருத்தமான முறை என்று கூறியது கண்டி அறிஞர்கள் மாத்திரமல்லர். 1944 இல் இலங்கைக் கம்யூனிசக் கட்சியும் இலங்கைக்கு ஒரு சமஷ்டி அரசமைப்பு இருக்க வேண்டுமெனக் கூறி தீர்மானமொன்றை நிறை வேற்றியது. இலங்கையில் முதலில் ஒரு சமஷ்டி ஏற்பாட்டைக் கோரிய முதலாவது அரசியல் கட்சி அதுதான். தமிழரசுக் கட்சியல்ல. தமிழரசுக் கட்சிப் பிறப்பதற்கு ஐந்து வருடங்களுக்கு முன்னரே 1944 இல் ஒரு சமஷ்டி அரசமைப்பைக் கோரித் தீர்மானமொன்றை நிறை வேற்றியது இலங்கை கம்யூனிசக் கட்சிதான். கென மன் – வைத்தியலிங்கம் முன் மொழிவு அச்சமஷ்டி ஏற்பாடுகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தொடர்பாக விளக்கமான ஆலோசனைகளைக் கொண்டிருந்தது.

அக்காலப்பகுதியில் தமிழர் கோரிக்கை மிகவும் யதார்தமற்றதாக, ஏன் நியாயமற்றதாகக்கூட இருந்தது. மகாராணியின் சட்டத்தரணி திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது என்று அறியப்பட்ட சம பிரதிநிதித்துவத்தைக் கோரினார். முன்னைய நிகழ்வுகள்பற்றியபுரிந்துணர்வைக்கொண்டு அது ஒரு நியாயமற்ற, நடைமுறைச் சாத்தியமற்ற முன்மொழிவு என்று என்னால் கூற முடியும்.

ஒருவேளை அதன் காரணமாகவோ என்னவோ, இலங்கை சுதந்திர கட்டளை 1947 இல் பிரித்தானியாவில் நிறைவேற்றப்பட்டது. எமது முதலாவது அரசமைப்பு இலங்கையில் நிறைவேற்றப்படவில்லை என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும். அது பக்கிங்ஹாம் மாளிகையில் நிறைவேற்றப்பட்டது. இத்தீவை ஒரே அலகாக வைத்திருப்பதற்கான தீர்மானம் பிரித்தானியாவில் மேற்கொள்ளப்பட்டது போலவே, சுதந்திர இலங்கையில் எமக்குக் கிடைத்த முதலாவது அரசமைப்பும் சபையின் ஒரு கட்டளையாக (order - in-council) பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. கண்டியிலிருந்து மாத்திரம் வந்த சமஷ்டி கருத்தினை நிராகரித்து அது நிறைவேற்றப்பட்டது. அப்போது தமிழ் தலைவர்கள்ஒருசமஷ்டி ஏற்பாட்டைகோரியிருப்பின், அது வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால்அது நடைபெறவில்லை. வேறு சமூகங்களுக்கு வழங்கப்படாத குறிப்பிட்ட நன்மைகளை அல்லது சலுகைகளை வழங்குவதற்கு அல்லதுவேறுசமூகம்அனுபவிக்கும் ஒரு குறிப்பிட்ட சலுகையை பிற சமூகமொன்றிடமிருந்துபறிப்பதற்கு சட்டங்களை ஆக்குவதற்கான நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைக் கட் டுப்படுத்திய ஒரு பாதுகாப்பு பிரிவு 29 இல் இருந்த போதிலும், சாதாரண பெரும்பான்மை ஆட்சியைக் கொண்ட ஒரு சாதாரண அரசமைப்பு நிறைவேற்றப்பட்டது. பிரிவு 29 இல் வழங்கப்பட்ட பாதுகாப்பு முழுக்க முழுக்க பயனற்றதாகிப்போனது.

ஏனெனில், பிரஜா உரிமைச் சட்டம்தான் 1949 ஆம் ஆண்டு சுதந்திர இலங்கையில் முதலில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களுள்

ஒன்றாக இருந்தது. அது பயனற்றது என நான்ஏன்கூறுகிறேன்? ஏனெனில், (எத்தனை உறுப்பினர்கள் என்று எனக்கு சரியாகத் தெரியாது ஆனால்) நூறுக்குக் குறைவான உறுப்பினர்களைக் கொண்டிருந்த முதலாவது நாடாளுமன்றத்தின் ஏழு உறுப்பினர்கள் மலையக தமிழ் சமூகத்தைச் சார்ந்தவர்களாவர். பிரஜா உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது, நாடாளுமன்றத்தில் இருந்த அந்த ஏழு உறுப்பினர்கள் அடங்கலாக அவர்கள் அனைவருமே தமது பிரஜா உரிமையை இழந்தனர். எனவே, பிரிவு 29 முழுமையாக பயனற்றதாகிப் போனது. ஏனெனில், வெறுமனே ஏதோ ஒரு சலுகையல்ல, ஒருநாட்டின்குடித்துவத்தின்அடிப்படை அம்சமே நிறைவேற்றப்பட்ட ஒரு சாதாரண சட்டத்தினால் இழக்கப்பட்டது. இந்திய – பாகிஸ்தான் பிரஜாவுரிமைச் சட்டம் என்று அழைக்கப்படும் சட்டத்தைத் தொடர்ந்து – இவ்விரு சட்டங்களும் நிறைவேற்றப்பட்டதன் பின்னர்தான் இன்று நான் ஓர் உறுப்பினராக இருக்கும் தமிழரசுக் கட்சி 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் 18 ஆம் திகதி உதயமானது. இலங்கைத் தமிழரசுக் கட்சி (TAK) என்பதே அதன் உத்தியோகபூர்வ பெயர். ஆனால், சமஷ்டி கட்சி என்ற பெயரையே அது எப்போதும் கொண்டிருந்துள்ளது. தேர்தல் முடிவுகளின்போது நீங்கள் அதனை Federal porty என்றுதான் காண்பீர்கள். உண்மையில் அதன் உத்தியோகபூர்வ பெயர் அதுவல்ல. எனினும், சமஷ்டிக் கட்சி என்றே அது எப்போதும் அழைக்கப்படுகிறது. 1951 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திருகோணமலையில் நடைபெற்ற அதன் முதலாவது மாநாட்டில் அது சமஷ்டி ஏற்பாடு ஒன்றைக் கோரும் தீர்மானமொன்றை நிறைவேற்றியது.

(மிகுதி நாளை)

காலைக்கதிர் Kalaikkathir

கல்விக் கதிர் வெளியீடு 08

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

பகுதி I

27. கடிகாரம் ஒன்று 6.00 மணியைக் காட்டுவதற்கு 6 தடவைகள் அடிக்கும் இதற்கு 5 செக்கன் எடுக்கும். இக்கடிகாரம் 12 மணியைக் காட்டுவதற்கு 12 தடவை மணிகள் அடிக்கும் எனின் இதற்கு எடுக்கும் நேரம் யாது?
1. 12 செக்கன் 2. 11 செக்கன் 3. 10 செக்கன்

நான்கு சிறுவர்கள் குறிக்கப்பட்ட நேரங்களில் வெட்டி எடுத்த தள உருக்களின் விபரம் வருமாறு

பெயர்	எடுத்த நேரம்	தள உருக்கள்
நசீர்	20 நிமிடம்	10
நிரோ	10 நிமிடம்	07
கரி	30 நிமிடம்	18
வினித்	15 நிமிடம்	12

28. தள உருக்களை வேகமாக வெட்டி எடுத்தவர் யார்?
1. வினித் 2. கரி 3. நிரோ

29. நால்வரிலும் தள உருவை வெட்டி எடுப்பதில் வேகம் குறைந்தவர் யார்?
1. நிரோ 2. நசீர் 3. கரி'

30.பை ஒன்றிலுள் 2 நீலநிற மாபிள்களும் , 3 கறுப்பு நிற மாபிள்களும் உள்ளன. இவற்றுள் ஒன்றை எழுமாறாக எடுக்கும் போது கட்டாயம் கறுப்பு நிற மாபிள் வரும் தடவை யாது?
1. 3 ஆவது தடவை
2. 4 ஆவது தடவை
3. 5 ஆவது தடவை

31. பூமாலை ஒன்றில் முதல் இரு பூக்கள் வெள்ளை நிறமாகவும், அடுத்த பூ சிவப்பு நிறமாகவும் இறுதி இரு பூக்களும் மஞ்சள் நிறமாகவும் வரும் ஒழுங்கில் மாறி மாறி தொடுக்கப்பட்டிருந்தன. எனின் 126 ஆவது பூவின் நிறம் யாது?
1. வெள்ளை 2. மஞ்சள் 3. சிவப்பு

32. வரிசை ஒன்றின் ஆரம்பத்தில் பிரியாவும் இறுதியில் சங்கவியும் நடுவில் மாலதியும் உள்ளனர். மாலதிக்கும் பிரியாவிற்கும் நடுவில் கமலி நின்றிருந்தாள். கமலி பிரியாவிலிருந்து மூன்றாவதாக நின்றிருந்தாள். எனின் வரிசையில் நின்றிருந்தவர்களின் எண்ணிக்கை யாது?
1. 4 2. 5 3. 9

பின்வரும் நெய்யரியைக் கொண்டு விடை தருக.

8	B	3	1	M
9	R	க	4	P
தி	S	6	D	ம
N	5	நீ	ப	உ
2	ச	T	7	E

33.ஆங்கில எழுத்துக்களும் ,இலக்கங்களும் சம அளவில் இருப்பின் உ எழுத்தின் மீது (X) அடையாளமிடுக. அவ்வாறு இல்லை எனின் ச என்ற எழுத்தின் மீது ☐ வரைக.

34. இவ் நெய்யரியின் இலக்கத்தை விட எழுத்துக்கள் கூடுதலாக இருப்பின் முதலாவது நிரலின் இறுதி இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக அவ்வாறு இல்லையெனின் முதலாவது நிரையின் இறுதி எழுத்தின் மீது புள்ளடியிடுக.

35. நான் ஓர் ஆண் ஆவேன். குணசீலனின் மகன் எனது சித்தப்பா எனின், குணசீலனுக்கும் எனக்கும் உள்ள உறவுமுறை யாது?
1. குணசீலன் எனது பாட்டன்
2. குணசீலன் எனது மாமா
3. குணசீலன் எனது தந்தை

36. 4,5 என்னும் இரு எண்களினாலும் மீதியின்றி வகுபடக் கூடியனவும் 25 இற்கும் 75 ற்கும் இடையே உள்ளனவுமான எண்களின் எண் ணிக்கை யாது?
1. 2 2. 4 3. 5

37. ஒரு வீட்டில் தொலைக்காட்சி பி.ப 1.00 தொடக்கம் பி.ப 3.15 வரைக்கும் கணினி பி.ப 2.15 தொடக்கம் 3.30 வரைக்கும் மின்விசிறி பி.ப 2.30 தொடக்கம் பி.ப 3.45 வரைக்கும் தொழிற்பட்டன. மூன்று உபகரணங்களும் ஒரே வேளையில் தொழிற்பட்ட நேரம் ?
1. 45 நிமிடம்
2. 1 மணித்தியாலம்
3. 1 மணித்தியாலம் 15 நிமிடம்

38. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நான்கு கால் நான்கு கதிரைகள் உள்ளன. எனவே கால்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1. 16 2. 19 3. 20

39. 100 தொடக்கம் 110 வரையுள்ள எண்களை எழுதும் போது 0 எழுதப்படும் தடவைகள் எத்தனை?
1. 9 2. 10 3. 12

40. பெப்ரவரி மாதத்தில் 5 ஆம் நாள் புதன்கிழமை ஆகும். அம்மாதத்தி லுள்ள ஞாயிற்றுக்கிழமைகளின் எண்ணிக்கை
1. 3 2. 4 3. 5

பகுதி II

பின்வரும் பந்தியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக

"ருவனி" அன்று இருட்டிய பிறகே வீட்டுக்கு வந்தாள். வேறு நாள்களில் இல்லாதவாறு வீட்டைச் சுற்றி வெளிச்சமாக இருந்தது, தூரத்திலே இருள் தெரிந்தது. ருவனி ஆகாயத்தைப் பார்த்தாள். வானத்தில் சந்திரன் (நிலவு) தோன்றவில்லை. நட்சத்திரங்கள் பெருமளவாக மின்னின. அவள் மீண்டும் வீட்டுப் பக்கத்தை ஆர்வத்தோடு பார்த்தாள்.

1) ருவனி இச்சொல்லில் காணப்படும் எழுத்துறுப்புக்கள் இரண்டைஎழுதுக?

.....

2) வெளிச்சம் என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக?

.....

3) அதிகம் என்ற கருத்தைத் தரும் பந்தியில் குறிக்கப்படும் சொல் ?

.....

4) ஒன்றைத் தெரிந்து கொள்ளும் ஆசை என்பதன் கருத்தை தரும் தனிச் சொல்லைத் தருக

.....

5) இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் பெண்பால் ஒருமைச் சொல்லுக்குரிய இறந்த கால வினைச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக?

.....

6) கண்ணில் பட்டது என்பதன் பொருளை எழுதுக

.....

7) தரப்பட்டுள்ள இடைவெளிக்கு மிகவும் பொருத்தமான சொல்லை அடைப் புக் குறிக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக

i) இதுவரை வெளிச்சத்தில் .....
(மிண்ணிய / மின்னிய)

ii) பிள்ளைகள் ஆசிரியை வருவதைக் கண்டதும் .....
(நிசப்தம் / நிஸப்தம்) ஆனார்கள்.

8) கீழே தரப்பட்டுள்ள கவிதையில் உள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக
இடர் வரும்போது – உள்ளம்
இரங்கிடும் போதும்

.....
உடன் பிறந்தவர்போல் – மாந்தர்

9) கீழே தரப்பட்டுள்ள வினாவிற்குரிய விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக
சுத்தத்தைப் பேணுவதன் மூலம் எதனைப் பெறமுடியும்?

.....

10) பின்வரும் பிராணியின் இளமைப் பெயரை எழுதுக

கீரி .....

11) கீழே தரப்பட்டுள்ளஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக

i) Where ..... (is/ are) you going?

ii) I ..... (want/ wants) to pluck flowers.

12) கீழேதரப்பட்டுள்ள சிங்கள சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக

மதுருவா .....

13) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக?

சூரியன் உதிக்கிறது .....

14) தயவுசெய்து செவிமடுங்கள்' என்னும் பொருள் தரும் வாக்கியத்தை ஆங்கிலத்தில் எழுதுக

.....

15) Happy Birthday to You என்னும் வாக்கியத்தின் பொருளை தமிழில் எழுதுக

.....

16) டெங்குநோயைஒழிப்போம் என்ற தலைப்பில் நான்கு வாக்கியங்கள் எழுதுக
.....
.....
.....
.....

புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 06
பகுதி I, II இன் விடைகள் 11 ஆம் பக்கத்தில்...

பாதையை புனரமைக்கக் கோரி தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டம்

நுவரெலியா மாவட்டத்திற்குட்பட்ட சாமி மலை ஓல்டன் தோட்டத்திலிருந்து நிலா வத்தை பிரிவுக்கு செல்லும் சுமார் 08 கிலோ மீற்றர் தூரம் கொண்ட பிரதான பாதையை புனரமைக்கக் கோரி ஓல்டன் தோட்ட மக்கள் நேற்று முற்பகல் 10 ம ணியளவில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நிலாவத்தை தோட்டத்தில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 100ற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு பதா கைகளை ஏந்தி, எதிர்ப்பு கோங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தை நடத்தி னர்.

பல வருடகாலமாக புனரமைக்கப்படா மல் மிகவும் மோசமான நிலையில் பாதை எது குழி எது பள்ளம் என்று தெரியாத அளவுக்கு குண்டும் குழியுமாகக் காணப் படுகின்றது. இப்பாதையை 100 இற்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

பாதை சீர்கேட்டினால் இத்தோட்ட மக்கள் கால் நடையாக நகரத்திற்கு செல் வதோடு வீட்டுக்குத் தேவையான பொருள் களை வாகன வசதிகள் இல்லாமல் தலை யில் சுமந்து செல்கின்றனர் என ஆர்ப்பாட் டத்தில் ஈடுப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

தோட்டத்தில் இருந்துசெல்லும் பிரதான வீதியில் நீர் ஓடை உள்ளதால் மழைக் காலங்களில் நீர் ஓடையை கடக்கமுடியா மல் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகிறார்கள் எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை பாடசாலை மாணவர்கள் இப்பகுதியை கடக்கும் போது தங்களின் பாதணிகளை கழற்றிக்கொண்டுசெல்லும் அவலநிலை பலவருடங்களாக இடம்பெறு வதாக மாணவர்கள் புலம்புகின்றனர்.

இத்தோட்டத்தில் உள்ள நோயாளர்கள் மற்றும் தாய்மார்கள் வைத்தியசாலைக்கு செல்வதாக இருந்தால் வாகன வசதிகள் இன்றி நடந்துச்செல்லவேண்டும்.

நடந்துச்செல்லமுடியாத நோயாளர் களை பொதுமக்களின் உதவியுடன் வைத்தியசாலைக்கு சுமந்து செல்லும் சூழ்நிலையில் இம்மக்கள் வாழ்கின்றனர்.

இப்பாதையைப் புனரமைத்து தரு மாறு பல அதிகாரிகளிடமும், அரசியல்வாதி களிடமும் கோரியபோதிலும் இதுவரை எந்த அதிகாரியும் நடவடிக்கை எடுக்க வில்லையென ஆர்ப்பாட்டத்தில் ஈடுப் பட்டவர்கள் அதிகாரிகள் மீது குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே இப்பாதையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக செப்பணியிட்டு தருமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தோட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிளிநொச்சி தீயணைப்புப் பிரிவின் சகலவிதமான வேலைகளும் பூர்த்தி

கிளிநொச்சி, ஜூலை 30

கிளிநொச்சி மாவட்டத்தின் தீயணைப்புப் பிரிவுக்கான சகல வேலைகளும் பூர்த்தியாக் கப்பட்டுள்ளன என மாவட்ட அரச அதிபர் சுந்த ரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கான தியணைப் புப்பிரிவு இல்லாத நிலையில் கடந்த ஆண்டு கிளிநொச்சி பொதுச்சந்தையில் ஏற்பட்ட தீ விபத் தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இராணுவத்தினரதும் பொதுமக்களின தும் உதவியுடன் தீணையைக் கட்டுப்படுத்தும் செயற் பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், யாழ்ப் பாணம் மாநகர சபையின் தீயணைப்பு பிரிவி னரின் ஒத்துழைப்புடனேயே தீ முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து கிளிநொச்சி மாவட்டத்திற் கான தனியான தீயணைப்பு பிரிவு அமைய வேண்டியதன் அவசியம் நாடாளுமன்ற உறுப் பினர் சிவஞானம் சிறிதரனால் பல்வேறு தரப்புக்கள் மட்டத்திலும் கொண்டு செல்லப்பட் டதையடுத்து கிளிநொச்சி மாவட்டத்திற்கான தனி யான தீயணைப்பு பிரிவு ஒன்று அமைக்கப்பட் டுள்ளது.

இது தொடர்பான மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கருத்து தெரிவிக் கையில் –

தீயணைப்பு பிரிவு உருவாக்கம் தொடர்பான சகல வேலைத்திட்டங்களும் நிறைவு பெற் றுள்ளன.

கட்டட வேலைகள் மற்றும் அதற்கான வாக னங்கள் மற்றும் தீயணைப்பு இயந்திரம் தருவிக் கப்பட்டு பிரதேச சபையிடம் கையளிப்பதற் கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் மாவட்ட அரச அதிபர் சுந் தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கோடீஸ்வரர்களாகிய சிறைச்சாலை அதிகாரிகள்

சிறைச்சாலை அதிகாரிகள் பலர் திடீரென கோடீஸ்வரர்களாகி உள்ள னர் என இலங்கை சிறைச்சாலை தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள் ளன.

உதவி சிறைச்சாலை அதிகாரி களில் இருந்து உயர் அதிகாரிகள் வரை வருடாந்தம் தமது சொத்து விவரங்களை வெளியிட வேண்டும். எனினும் அவர்களின் உண்மை யான சொத்து விவரங்கள் வெளி யிடப்படுவதில்லை எனத் தெரிவிக் கப்படுகின்றது.

இந்த அதிகாரிகளில் அதிக மானோர் சிறைச்சாலை தொழிலுக்கு சென்ற பின்னர் அவர்கள் திடீரென கோடீஸ்வரர்களாகி விடுகின்றனர் என்றும் வாகனங்கள், காணி உட்பட சொத்துக்களுக்கு உரிமையாளர் களாக மாறிவிடுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறானவர்கள் பலரின் சொத்துக்கள் அவர்களின் மனைவி, பிள்ளைகள் அல்லது பெற்றோரின் பெயரிலேயேஉள்ளனஎனகொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட் டுள்ளது.

மட்டக்களப்பில் தமிழ் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு போட்டி

தமிழ் மாற்றுத்திறனாளிகள் சம்மேளனத் தினால் தமிழ் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு போட்டியின் முதல் நாள் நிகழ்வுப் பரிசளிப்புகள் நேற்றுமுன்தினம் மாலை மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்றன.

நேற்று முன்தினம் தினம் காலை முதல் நடைபெற்ற போட்டிகளில் முதல் 3 இடங்களையும் பிடித்த இளை ஞர் யுவதிகளுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக் கப்பட்டனர்.

புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 07 இன் பகுதி I , பகுதி II இன் விடைகள்

பகுதி I

1.	3	11.	2	21.	3	31.	2
2.	3	12.	-	22.	3	32.	3
3.	1	13.	3	23.	1	33.	3
4.	3	14.	1	24.	3	34.	3
5.	3	15.	உடல்	25.	1	35.	3
6.	2	16.	ஈருளி	26.	1	36.	2
7.	3	17.	3	27.	1	37.	2
8.	2	18.	2	28.	2	38.	3
9.	3	19.	1	29.	2	39.	3
10.	1	20.	3	30.	1		

பகுதி II

01.
1.அரைவாசி
2. அரைப்பகுதியை
3.மெதுவாக
4.கடல் அலை போல
5.கிடையாக வைத்து மெதுவாக உருட்டினர்
6. கடல் அலை போல
02.
1. ஊழியர்களால்
2. முயற்சி
3. குப்பை கூளங்களை
4. குருவிடம்
03.
1. அகவும்
2. நாற்று
3. பிள்ளை
04. ஒயகே வயச கியத
05.
06.
1. தயவு செய்து வெளியே போ
2. நான் ஒரு பேனா வைத்திருக்கிறேன்
07.தீர்க்க தரிசி
08.28,32,36
09.1. Are you ready??
2. What is your wish?
10.மனிதனுக்கும் கூழ லுக்கும் இடையே நெருங் கிய தொடர்பு காணப்படு கின்றது
11.ஐயோ என்னைக் காப் பாற்ற மாட்டீர்களா?
12.
1. நாய்கள் உறக்கத்தில் இருந்தன
2. சித்திரையில் பூக்கள் மலர்ந்தன
13.Rabbit
14.பொருத்தமான வாக்கியம்
15.394
16.658
17.582
18.1. 1346

2. ஆயிரத்து முன்னூற்று அறுபத்து ஆறு
19.14
20.12.45 Am
21.ரூ 398
22.375 ml
23.30m 40 cm
24. 1. 360
2. 72
25. ரூ 294
26.



27. 1

வாங்கிய பொருள்	அளவு	விலை	
		ரூபா	சதம்
பால்மா	4 பக்கெற்றுக்கள்	1400	00
தேயிலை	250 g	.....206...	
சீனி	2 kg	...190.....	
	மொத்தம்	....1796.....	

28. 1
29. 1
30. 2
31. 3
32. 4
33. 2
34. 3
35. 1
36. 2
37. 1
38. 3
39. 2
40. 1
41. 2
42. 3
43. 3
44. 2
45. 2
46. 4
47. 3

காலைக்கதிர் Kalaikkathir

அமெரிக்காவுடன் நேரடி பேச்சு தொடரும்; முன்னாள் தலிபான் அமைச்சர் அறிவிப்பு

பெஷாவர், ஜூலை 30

அமெரிக்காவுடன் தலிபான் பேச்சை தொடரும் என ஆப்கானிஸ்தான் தலிபான்கள் அரசின் முன்னாள் நிதி அமைச்சர் முஸ்டாசிம் ஆகா ஜன் கூறியுள்ளார்.

அமெரிக்க ராணுவ தலைமையகம் பென்டகன், நியூயோர்க் உலக வர்த்தக மையம் ஆகியவற்றின் மீது அல்கொய்தா பயங்கரவாதிகள் விமானங்களை மோதி 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை கொன்று குவித்தனர். 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி நடந்த இந்தத் தாக்குதல்கள், உலகையே அதிர்ச்சியில் ஆழ்த்தின.

அதைத்தொடர்ந்து அல்கொய்தா பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் தந்த ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா போர் தொடுத்தது. அங்கு தலிபான்களை ஆட்சியில் இருந்து அகற்றியது. அதைத் தொடர்ந்து அங்கு 18 ஆவது ஆண்டாக உள்நாட்டுப் போர் நீடிக்கிறது. இதை முடிவுக்குக் கொண்டு வருவதில் அமெரிக்கா தீவிரமாக உள்ளது.

இது தொடர்பாக தலிபான்களுடன் அமெரிக்க அதிகாரிகள் பேச்சை நடத்தினர் எனத் தகவல்கள் வெளிவந்தன. அதை இப்போது ஆப்கானிஸ்தான் தலிபான்கள் அரசின் முன்னாள் நிதி அமைச்சர் முஸ்டாசிம் ஆகா ஜன் உறுதி செய்து உள்ளார்.

தற்போது துருக்கியில் உள்ள அவர் இதுபற்றி கூறுகையில் –

கட்டார் நாட்டில் தலிபான் அரசியல் பிரதிநிதிகளுடன் அமெரிக்க அதிகாரிகள் நேரடிப் பேச்சு நடத்தினார்கள். இதில் வேறு எந்த தரப்பினரும் பங்கேற்கவில்லை. இப்போது இந்தப் பேச்சு அடிமட்ட அளவில் உள்ளது. இரு தரப்பினரும் பேச்சை படிப்படியாக அடுத்த கட்டத்துக்கு எடுத்துச்செல்வார்கள்.

பேச்சு உயர்மட்டத்தில் நடைபெறுகிறபோது, நாங்கள் உடன்பாட்டை எட்டமுடியும். தலிபான்களும், அமெரிக்க அதிகாரிகளும் தொடர்ந்து பேச்சு நடத்துவார்கள் என்று தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் அரசுடன் தலிபான்கள் பேச்சு நடத்த மறுத்தது பற்றி கேள்வி எழுப்பியபோது, தலிபான்களின் போர், ஆப்கானிஸ்தானுக்கு எதிரானது அல்ல. அது அமெரிக்காவுக்கு எதிரானது என பதில் அளித்தார்.

இந்தத் தகவல்களை பாகிஸ்தானின் 'தி டெய்லி டைம்ஸ் ஏடு வெளியிட்டுள்ளது

ஜப்பானில் ஜாங்டரி புயல்; 107 விமான சேவைகள் ரத்து!

டோக்கியோ ஜூலை 30

ஜப்பான் நாட்டை நெருங்கும் ஜாங்டரி புயலால் டோக்கியோவிலும், பிற விமான நிலையங்களில் இருந்தும் புறப்பட்டுச் செல்ல வேண்டிய 107 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன என ஜப்பான் ஏர்லைன்ஸ் தெரிவித்துள்ளது.

ஜப்பான் நாட்டை 'ஜாங்டரி' (வானம்பாடி) என்று பெயரிடப்பட்டு உள்ள புயல் நெருங்கிக்கொண்டு இருக்கிறது. இது தாக்கும் என்று வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இந்தப் புயல் காரணமாக டோக்கியோவிலும், ஹோன்சு தீவு பகுதியிலும் மிகப் பலத்த மழை பெய்யும். 15 அங்குல அளவுக்கு இந்த மழை இருக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதேவேளை, நேற்று முன்தினம் இரவு டோக்கியோவில் நடைபெற விருந்த வாணவேடிக்கை திருவிழா புயல், மழையினால் ஒத்தி போடப்பட்டுள்ளது.

ஜப்பானுக்கு ஜூலை மாதம், இயற்கை பேரிடர் மாதமாக மாறி விட்டது. ஏற்கனவே கடந்த சில தினங் களாக கடுமையான அனல் காற்று வீசி அங்கு 80இற்கும் மேற்பட்டோர் பலியானமையும், 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டமையும் நினைவுகூரத்தக்கது.

இப்போது இந்தப் புயல், மழையினால் என்ன சேதம் ஏற்படப்போகிறதோ என ஜப்பான் மக்கள் கவலையில் ஆழ்ந்து உள்ளனர்.

இம்ரானின் கட்சி 116 இடங்களில் வெற்றி

இஸ்லாமாபாத், ஜூலை 30

பாகிஸ்தானில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கானின் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி 116 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது என அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகி உள்ளது.

பாகிஸ்தானில் கடந்த 25 ஆம் திகதி நாடாளுமன்றத்தின் 272 தொகுதிகளுக்கும், 4 மாகாணங்களுக்கும் தேர்தல் நடைபெற்றது. அந்த தேர்தலில் இம்ரான் கானின் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி சுமார் 115 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளதாக தேர்தல் ஆணையம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த தேர்தல் முடிவுகளை நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி உட்பட சில எதிர்க்கட்சிகள் ஏற்க மறுப்பு தெரிவித்து வருகின்றன. தேர்தல் வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு நடந்திருப்பதாக குற்றம் சாட்டியுள்ளன. அதே சமயம் எவ்வித முறைகேடுகளும் நடக்கவில்லை என பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இந்தத் தேர்தல் முடிவுகளை அதிகாரபூர்வமாக பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதில் 272 தொகுதிகளில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் 116 தொகுதிகளில் இம்ரான் கானின்



அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியானது

தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி வெற்றி பெற்றுள்ளது எனத் தெரிவித்துள்ளது.

66 தொகுதிகளில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. அத்துடன் மாகாண தேர்தலின் முடிவுகளை அறிவித்துள்ள தேர்தல் ஆணையம், பஞ்சாப் மாகாணத்தில் சுமார் 129 தொகுதிகளில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி வெற்றிபெற்றுள்ளது. சிந்துமாகாணத்தில் 76 தொகுதிகளில் பாகிஸ்தான் மக்கள் கட்சியும், கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் 66 தொகுதிகளில் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சியும், பலோசிஸ்தான் மாகாணத்தில் 15 தொகுதிகளில் அவாமி கட்சி வெற்றிபெற்றுள்ளனஎன்றும்பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

பாக். நாடாளுமன்ற தேர்தலில் மண் கவ்விய பிரிவினைவாத, பயங்கரவாத இயக்கங்கள்!

பாகிஸ்தான் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட பயங்கரவாதம் மற்றும் பிரிவினைவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் படுதோல்வி அடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் கடந்த 25 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் இம்ரான்கானின் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி 116 இடங்களில்வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் நிலையில் உள்ளது. இந்தத் தேர்தலில் 66 இடங்கள் மட்டுமேபெற்றநவாஸ்ஷெரீப் பின் பாகிஸ்தான் முஸ்லிம் கட்சி எதிர்க்கட்சி ஸ்தானத்தைப் பிடித்துள்ளது.

இந்த நிலையில், பாகிஸ்தான் தேர்தலில் போட்டியிட்ட பிரிவினைவாதம் மற்றும் பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது அந்த இயக்கங்கள் மூலம் ஆதரிக்கப்பட்டவர்கள் படுதோல்வி அடைந்துள்ளனர் எனத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தடை செய்யப்பட்ட ஜமாத் உல் தாவா இயக்கத்தின் ஆதரவு பெற்ற கட்சியின் வேட்பாளர்கள் எவரும் வெற்றி பெறவில்லை என்றும், கோடிக் கணக்கில் பதிவான வாக்குகளில் 1 லட்சத்து 71 ஆயிரம் வாக்குகள் மட்டுமே அந்த வேட்பாளர்கள் பெற்று படுதோல்வி அடைந்துள்ளனர் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதேபோல், சிந்து மாகாண தேர்தலில் போட்டியிட்ட பிரிவினைவாத கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களில் இருவர் மட்டுமே வெற்றி பெற்றுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதரீதியிலான கட்சிகள் கூட 5 ஆயிரம், 9 ஆயிரம் என சொற்ப வாக்குகளில் தோல்வியை தழுவின என கூறப்பட்டுள்ளது.

பயங்கரவாதிகளின் கூடாரம் என உலக நாடுகளால் கூறப்படும் பாகிஸ்தான் நாட்டின் மக்கள் எவரும் பயங்கரவாதத்தையும், பிரிவினைவாத எண்ணம் கொண்ட தலைவர்களையும் ஏற்கவில்லைஎன்பது இந்த தேர்தல் முடிவுகளில் தெரியவந்துள்ளது.

ஐ.நாவில் பணம் குறைவடையும் நிலை; பங்களிப்பு தொகையைத் தாருங்கள்!

உறுப்பு நாடுகளிடம் பொதுச் செயலாளர் குத்தேரஸ் வேண்டுகோள்

ஐ.நா.வில் பணம் விரைவில் முடிவடையப் போகிறது. தங்கள் பங்களிப்புத் தொகையை உடனடியாக கொடுங்கள். அப் போது தான் சர்வதேச அளவில் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளை தொட முடியும் என்று உறுப்பு நாடுகளுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் 193 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்தநாடுகள் ஆண்டு தோறும் அளிக்கும் நிதியுதவியில், சர்வதேச அளவில் அமைதிப் பணி உட்பட பல்வேறு பணிகளில் ஐ.நா. ஈடுபட்டு வருகிறது.

இந்தநிலையில், 2018 ஆம் ஆண்டு ஐ.நாவின் செலவு குறித்த பட்ஜெட்டுக்கு சமீபத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், உறுப்பினராக உள்ள நாடுகளுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் குத்தேரஸ் அனுப்பியுள்ள அவசர கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

ஐ.நாவிடம் தற்போது மிகக் குறைந்த அளவே பணம் உள்ளது. அதுவும் விரைவில் தீர்ந்து விடும் நிலையில் உள்ளது.

எனவே, பட்ஜெட்டில் குறிப்பிட்டபடி உறுப்பினராக உள்ள நாடுகள் தங்கள் பங்களிப்புத் தொகையை உடனடியாகவும், முழுமையாகவும் வழங்க வேண்டும். அப்போது தான் ஐ.நாவால் பணிகளை தொடர்ந்து செய்ய முடியும். ஐ.நாவில் இதுபோல் பணப் பற்றாக்குறை ஏற்படுவது இது முதல் முறை அல்ல. ஆனால், இந்த ஆண்டு பணம் மிகக் குறைவாக உள்ளது. அதற்குக் காரணம் உறுப்பு நாடுகள் தாமதமாக பங்களிப்புத் தொகையை அளிக்கின்றமை தான்.

கடந்த ஜூலை 26 ஆம் திகதி நிலவரப்படி இந்தியா உட்பட 112 நாடுகள் தங்கள் பங்களிப்புத் தொகையை வழங்கி விட்டன. (இந்தியா 17.91 மில்லியன் டொலர் தொகையைக் கடந்த ஜனவரி மாதமே வழங்கிவிட்டது.) ஆனால், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சவுதி அரேபியா, செசல்ஸ், சூடான், சிரியா, அமெரிக்கா, ஸிம்பாப்வே உட்பட 81 நாடுகள், தங்கள் பங்களிப்புத் தொகையை இன்னும் வழங்கவில்லை. இதனால் ஐ.நாவில் பணப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறுபொதுச்செயலாளர் குத்தேரஸ் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நாவுக்கு உறுப்பினர் நாடுகள் அளிக்கும் நிதியில், அமெரிக்கா மட்டும் 25 சதவீத நிதியை அளிக்கிறது. ஆனால், கணக்கு வழக்கு இல்லாமலும், தேவையில்லாமலும் பணம் செலவிடப்படுவதாக அமெரிக்கா குற்றம் சாட்டிவருகிறது. (க)

தி.மு.க. தலைவர் கருணாநிதி உடல்நிலை சீரடைந்து வருகிறது

சென்னை, ஜூலை 30

இரத்த அழுத்தம் குறைந்ததால் காவேரி மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு சிறப்பு மருத்துவர்கள் குழு சிகிச்சை அளித்து வருகிறது.

ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன், காங்கிரஸ் மூத்த தலைவர் குலாம்நபி ஆசாத் உள்ளிட்டோர் மருத்துவமனைக்குச் சென்று கருணாநிதியின் உடல்நலம் குறித்து விசாரித்தனர்.

கடந்த 18 ஆம் திகதி காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட கருணாநிதிக்கு டிரக்யாஸ்டமி கருவி மாற்றப்பட்டது. அன்றைய தினமே வீடு திரும்பிய கருணாநிதிக்கு சிறுநீர் பாதை தொற்றால் காய்ச்சல் ஏற்பட்டது.

ஒரு வாரமாக காய்ச்சல் குறையாததால் சிறப்பு மருத்துவர்கள் குழு அமைக்கப்பட்டு கோபாலபுரம் வீட்டிலேயே சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. துணை முதல்வர் ஓ.பன்னீர் செல்வம், அமைச்சர் கள் டி.ஜெயக்குமார், தங்கமணி, எஸ்.பி.வேலுமணி உள்ளிட்டோர் கருணாநிதியின் வீட்டுக்குச் சென்று உடல்நலம் விசாரித்தனர்.

அவரது உடல்நலம் சீராக உள்ளது என்று அறிவிக்கப்பட்ட நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு அவருக்கு, திடீரென ரத்த அழுத்தம் குறைந்தது. நள்ளிரவு 1.30 மணிக்கு அம்புலன்ஸ் மூலம் காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மகன்கள் மு.க.ஸ்டாலின், மு.க.அழகிரி, மு.க. தமிழரசு, கருணாநிதியின் துணைவியார் ராஜாத்தி அம்மாள், மகள்கள் செல்வி, கனிமொழி, துர்கா ஸ்டாலின் உள்ளிட்ட குடும்பத்தினரும் க. அன்பழகன் உள்ளிட்ட தி.மு.க. தலைவர்களும் மருத்துவமனைக்கு வந்தனர்.

கருணாநிதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட செய்தி பரவியதும் ஆயிரக்கணக்கான திமுக தொண்டர்களும் பொதுமக்களும் அப்பகுதியில் திரண்டனர். அம்புலன்ஸ் முன்பு தி.மு.க. தொண்டர்களும், பெண்களும் கதறி அழுதனர்.

இது தொடர்பாக காவேரி மருத்துவமனையின் செயல் இயக்குநர் டாக்டர் அரவிந்தன் செல்வராஜ் நேற்றுமுன்தினம் அதிகாலை வெளியிட்ட செய்தியில், 'ரத்த அழுத்தம் குறைந்ததால் திமுக தலைவர் கருணாநிதி நள்ளிரவு 1.15 மணிக்கு தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டமையைத் தொடர்ந்து ரத்த அழுத்தம் சீராக உள்ளது. அவரை மருத்துவர்கள் குழு தொடர்ந்து கண்காணித்து சிகிச்சை அளித்து வருகிறது' எனக் கூறியுள்ளார்.

ஆளுநர் நலம் விசாரிப்பு

ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், நேற்றுமுன்தினம் காலை 9.50 மணிக்கு காவேரி மருத்துவ மனைக்கு வந்து மு.க.ஸ்டாலின், கனிமொழியிடம் கருணாநிதியின் உடல்நிலை குறித்து கேட்டறிந்தார். காவேரி மருத்துவமனையின் செயல் இயக்குநர் டாக்டர் அரவிந்தன் செல்வராஜ், கருணாநிதிக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து ஆளுநரிடம் விளக்கினார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் குலாம்நபி ஆசாத், காங்கிரஸ் தமிழக பொறுப்பாளர் முகுல் வாஸ்னிக், தமிழக காங்கிரஸ் தலைவர் சு.திருநாவுக்கரசர், முன்னாள் மாநிலத் தலைவர் கே.வீ.தங்கபாலு உள்ளிட்டோரும் நேரில் வந்து கருணாநிதியின் உடல்நிலை குறித்து ஸ்டாலின், கனிமொழியிடம் விசாரித்தனர். கருணாநிதிக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சைகள் குறித்து டாக்டர்கள் அவர்களுக்கு கூறினர்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 2.30 மணியளவில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன், பா.ஜ.க. மாநில பொதுச் செயலாளர் வானதி சீனிவாசன் ஆகியோர் கருணாநிதியின் உடல் நலம் குறித்து நேரில் விசாரித்தனர்.

காவேரி மருத்துவமனை செயல் இயக்குநர் அரவிந்தன் செல்வராஜ் நேற்றுமுன்தினம் இரவு வெளியிட்ட அறிக்கையில், 'மருத்துவ சிகிச்சை உதவியுடன் தி.மு.க தலைவர் கருணாநிதியின் உடல் நிலை சீராக உள்ளது. தீவிர சிகிச்சைப் பிரிவில் மருத்துவ குழுவினர் அவரது உடல்நிலையை தொடர்ந்து கண்காணித்து சிகிச்சை அளித்து வருகின்றனர்' என்று தெரிவித்துள்ளார்.

மருத்துவ உதவிகள் செய்ய தயார்: முதல்வர்

இதேவேளை, சேலத்தில் செய்தியாளர்களிடம் முதல்வர் கே.பழனிசாமி நேற்றுமுன்தினம் தெரிவிக்கையில் –

தி.மு.க. தலைவர் கருணாநிதி உடல் நலக் குறைவால் காவேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மருத்துவர்களால் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு அவர் குணமடைந்து வருகிறார். துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட அமைச்சர்கள் பலரும் நேரில் சென்று உடல்நலம் குறித்து விசாரித்து வந்திருக்கிறார்கள். தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு மருத்துவ உதவிகள் தேவைப்பட்டால், அதை செய்து கொடுக்க அரசு தயாராக உள்ளது என்று தெரிவித்துள்ளார். (க)

மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவை எதிர்கொள்ள காங்கிரஸ் புது வியூகம்: 'சக்தி' செயலி அறிமுகம்

எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கான பணியை கர்நாடகாவில் காங்கிரஸ் தொடங்கியுள்ளது. முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் ம.ஜ.த. கட்சியுடன் இணைந்து போட்டியிட காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது.

அதன்படி, மாநிலத்தில் மொத்த முள்ள 28 தொகுதிகளில் காங்கிரஸ் 18 இடங்களிலும், ம.ஜ.த. 10 இடங்களிலும் போட்டியிட முடிவெடுத்திருக்கின்றன என தகவல் வெளியாகியுள்ளது.

இந்தநிலையில், காங்கிரஸ் கட்சியில் அதிக அளவிலான தொண்டர்களை சேர்க்க 'சக்தி' எனும் புதிய செயலி தொடங்கப்பட்டுள்ளது. பெங்களூருவில் நேற்று முன்தினம் முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் இந்தத் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இந்த செயலி மூலமாக, வாக்காளர்களுக்கு செல்போனில் குறுஞ்செய்தி அனுப்பி கட்சியில் இணைக்கலாம். மேலும், வாக் காளர்களுக்கு வாக்குச்சாவடிஎண், உள்ளூர் காங்கிரஸ்செயலாளர், மாவட்ட காங்கிரஸ் தலைவரின் பெயர், கட்சியின் வரலாறு, தலைவர்களின் வரலாறு உள்ளிட்ட அனைத்து தகவல்களையும் தொண்டர்களுக்கு இதில் எளிதாக அனுப்ப முடியும்.

நிகழ்ச்சிக்குப் பின்னர் ப.சிதம்பரம்

தெரிவித்தவை வருமாறு–

"இந்த 'சக்தி' செயலி காங்கிரஸ் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் கிடைத்திருக்கும் முக்கிய சக்தியாகும். இதனை காங்கிரஸ் தொண்டர்கள் சரியாக வாக்காளர்களிடம் கொண்டு சென்றால், வருகிற தேர்தலில் காங்கிரஸ் மகத்தான வெற்றி பெறும். காங்கிரஸ் கட்சியின் மக்கள் நலத் திட்டங்களை வாக்காளர்களுக்கு எளிதாக பரப்ப முடியும்.

ஒரு காலத்தில், நேரு, இந்திரா காந்தி ஆகியோரின் பெயரை சொன்னாலே லட்சக்கணக்கானோர் வந்து காங்கிரஸுக்கு வாக்களித்து விடுவார்கள். அப்போது அதிக அளவில் கட்சிகள் இல்லை. இப்போது நிலைமை மாறிவிட்டது.

பிராந்திய கட்சிகளும், சிறிய கட்சிகளும் தேர்தலில் கணிசமான அளவில் வெற்றி பெறுகின்றன. பா.ஜ.க. போன்ற தேசிய கட்சிகளின் சவாலை எதிர்க்கொள்ளும் நிலையில், பிராந்திய கட்சிகளிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இப்போது நடக்கும் தேர்தல் முடிவுகளை ஒவ்வொரு வாக்குச்சாவடியும் தீர்மானிக்கிறது.

ஒவ்வொரு வாக்குச் சாவடியையும் ஒரு தொகுதியாக கருதி வெற்றி பெற வேண்டும். வாக்குச் சாவடிகளை அலட்சியமாக நினைத்தால், தேர்தல் முடிவை அது கடுமையாகப் பாதிக்கும்.

எனவே, வாக்குச் சாவடி மட்டத் தில் காங்கிரஸை பலப்படுத்த வேண்டும். ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் காங்கிரஸுக்கு மற்ற கட்சியினரை விட 2 மடங்கு நிர்வாகிகள் இருக்க வேண்டும்.

அப்படி இல்லாத பட்சத்தில், சக்தி ஆப் மூலம் உடனடியாக தொண்டர்களை சேர்க்க வேண்டும். எதிர் வரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்குள் லட்சக்கணக்கானோரை காங்கிரஸில் சேர்க்க வேண்டும். இந்த சக்தியை முழுமையாக பயன்படுத்தினால், பா.ஜ.கவை இல்லாமல் செய்துவிட முடியும் என சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

நாட்டை மீட்க 5 ஆண்டுகள் போதா; மோடி மீள பிரதமராக வேண்டும்!

தற்போது படுபாதாளத்தில் இருக்கும் நமது நாட்டை மீட்க மோடிக்கு 5 ஆண்டுகள் போதா. அவர் மீண்டும் பிரதமராக வரவேண்டும் என நடிகை கங்கனா ரனாவத் பேசியுள்ளார்.

பிரதமர் மோடியின் வாழ்க்கையின் ஒருபகுதியை மையமாக வைத்து எடுக்கப்பட்ட குறும்படத்தின் திரையீட்டு விழா நேற்றுமுன்தினம் மும்பையில் நடந்தது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற நடிகை கங்கனா ரனாவத், மோடி மீண்டும் பிரதமராக வேண்டும் என்ற தனது ஆவலை தெரிவித்துள்ளார்.

நிகழ்ச்சி முடிந்தபின் னர் அவர் பேசுகையில்– பிரதமர் மோடி சிறு வயதில் மிகவும் கடின மான சூழ்நிலைகளில் வாழ்ந்துள்ளார் என் பதை இந்த குறும்படம் காட்டுகிறது. நாம் தான் அவரை பிரதமராகத் தேர்ந்தெடுத்தோம். இந்த பதவியை யாராலும் பறிக்க முடியாது.

இது அவருடைய கடும் உழைப்பிற்கு கிடைத்த வெற்றி. நம் நாடானது தற்போது படுபாதாளத்தில் இருக்கிறது. இதிலிருந்து நாட்டை மீட்க 5 வருடங்கள் போதா. நாட்டை மீட்டெடுக்க மோடி மீண்டும் பிரதமராக வர வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்

உத்தரப்பிரதேசத்தில் கடும் மழையில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 58 ஆக உயர்வு!

உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் கடந்த 3 தினங்களாக பெய்த கடும்மழையில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 58 ஆக அதிகரித்துள்ளது.

பருவ மழை தீவிரம் அடைந்துள்ளதால் உத்தரப்பிரதேச மாநிலத்தில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால், மதுரா, ஆக்ரா, மீரட், முசாபர்நகர், காசியாபாத், ஜான்சி உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் வெள்ளக் காடாகின.

வீடுகள் இடிந்தும், இடி, மின்னல் தாக்கியும் சஹரான்பூரில் 11 பேரும், மீரட்டில் 3 பேரும், பெரெய்லியில் 2 பேரும் பலியாகினர்.

ஆக்ராவில் 5 பேரும், மெயின்புரியில் 4 பேரும், முசாபர் நகர், கஸ்கஞ்ச் பகுதிகளில் 3 பேரும், கான்பூர், மதுரா, காசியாபாத், ரேபரேலி உள்ளிட்ட பகுதிகளில் தலா ஒருவரும் என மொத்தம் 58 பேர் பலியாகி உள்ளனர். மேலும், 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் பெண்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய மாநகராட்சிகளில் சென்னைக்கே முதல் இடம்

இந்தியாவில் பெண்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய மாநகராட்சியில் சென்னை மாநகராட்சி முதல் இடம் பிடித்துள்ளது என்று அ.தி.மு.க. நிர்வாகிகள் கூட்டத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

அ.தி.மு.க. அரசில் கல்வி, சுகாதார துறை உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் திட்டங்கள் சிறப்பாக செயல் படுத்தப்பட்டு வருகின்றன. 8 வழி பசுமை சாலையை பொதுமக்கள் எதிர்க்கவில்லை. நான் விவசாயி என்பதால் எந்தவிதத்திலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளேன்.

ஆனால் இந்தத் திட்டத்தை சில கட்சி களைச் சார்ந்தவர்கள் மட்டுமே

எதிர்க்கிறார்கள். குறிப்பாக தி.மு.க., பா.ம.க., கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சி மற்றும் அமைப்புகளைச் சார்ந்தவர்கள் மட்டுமே அரசியல் ஆதாயத்திற்காக போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

போக்குவரத்துதுறையில் முந்தைய தி.மு.க.அரசு ரூ.6 ஆயிரம் கோடி கடனில் விட்டு விட்டு சென்றது. டெப்போக்களையும் அடமானம் வைத்துவிட்டு சென்றுவிட்டனர். எதற்கு எடுத்தாலும் இப்படி செய்யலாம், அப்படி செய்யலாம் என்று கூறும் மு.க.ஸ்டாலின் அவர் இருக்கும் போதே செய்ய வேண்டியது தானே?. இந்தியாவில் பெண்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய மாநகராட்சியில் சென்னை மாநகராட்சி முதல் இடத்தில் உள்ளது.

சட்டமன்றத்தில் மாற்றி, மாற்றி கேள்வி கேட் கிறார்கள். அதற்காகவே தினமும் 3 மணி நேரம் அனைத்து துறை தகவலையும் படித்து, அனைத்திற்கும் பதில் சொல்கிறேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

தமிழரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலோவின் உயர்மட்டக் குழுவினருக்கும் சம்பந்தன், மாவை சேனாதிராசாவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் மாலையில் திருகோணமலையில் இரா.சம்பந்தனின் இல்லத்தில் சந்திப்பு ஒன்று நடைபெற்றமை தெரிந்ததே.

அந்தச் சந்திப்புத் தொடர்பில் ஆரம்பத்தில் தகவல் வெளியிட்ட ரெலோ வட்டாரங்கள் – குறிப்பாக அதன் தலைவர், செயலாளர் போன்றோர் – அது சாதாரண கலந்துரையாடல் என்று குறிப்பிட்டு மேலோட்டமாக விடயங்கள் பேசப்பட்டன என்றே கூறினர்.

ஆனால் உள்வீட்டு வட்டாரங்கள் வேறு விதமாக உண்மையை அம்பலப்படுத்தின.

★ 2015 ஓகஸ்ட் பொதுத் தேர்தல் முடிந்த கையோடு, கூட்டமைப்புக்குக் கிடைத்த இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்களில் ஒன்றை, இரண்டரை வருடங்களின் பின்னர் ரெலோவுக்குத் தருவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. இப்போது மூன்று வருடங்கள் கடந்தும் அது குறித்து முடிவு கூறப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 10ஆம் திகதி கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கொழும்பில் நடைபெறவிருக்கின்றது. அதற்கு முதல் இது தொடர்பில் திட்டவட்மான ஒரு பதிலை கூட்டமைப்பின் தலைமையும், அதன் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தர வேண்டும். 'பிறகு பார்ப்போம்', 'கொஞ்சம் பொறுங்கள்', 'பொதுக் குழுவைக் கூட்ட வேண்டும்', 'மத்திய குழுவிடம் கலந்தாலோசனை செய்ய வேண்டும்' என்ற பாணியில் பதிலளிப்பதை விடுத்து 10ஆம் திகதிக்கு முன்னர் இவ் விடயத்தில் திட்டவட்டமான பதில் ரெலோவுக்கு உத்தியோக பூர்வமாகத் தரப்பட வேண்டும்.

★ முதல்வர் விக்னேஸ்வரன் தொடர்பில் தன்னுடைய நிலைப்பாடு என்னவென்பதை அடுத்த 10ஆம் திகதிக் கூட்டத்துக்கு முன்போ அல்லது அந்தக் கூட்டத்திலோ இலங்கைத் தமிழரசுக் கட்சி தெளிவுபடுத்தி விட வேண்டும். இதில் இனிமேலும் காலத்தை இழுத்தடித்து, சமாளிக்கும் முயற்சி இருக்கக்கூடாது. தமிழரசின் நிலைப்பாடு யாது என்பதை 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' உரைத்தால்தான் ரெலோ தனது தீர்மானத்தை எடுக்கலாம்.

★ தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் கூட்டமைப்பின் சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியே முற்றிலும் காரியங்களை ஆற்றுகின்றது. இந்த முயற்சிகள் தொடர்பில் டிசெம்பருக்குள் ஒரு முடிவு எட்டப்பட வேண்டும். அதற்குப் பின்னரும் காலத்தை இழுத்தடிக்க இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ரெலோ இணக்கம் தராது. மக்களின் ஆணையைக் காலத்தை இழுத்தடிக்கப் பயன்படுத்த முடியாது. அது தொடர்பில் நிலைமையைத் தெளிவுபடுத்தி ஒரு முடிவுக்கு – தீர்மானத்துக்கு – வருமாறு, ரெலோ வற்புறுத்தி நிற்கின்றது.

– இப்படி பல விடயங்கள் குறித்து, தமிழரசுத் தலைமையுடன் ரெலோ மிகக் காட்டமாகவும், இறுக்கமாகவும், காலக் கெடுவிதித்தும் இந்தச் சந்திப்பில் உரையாடியதாக நம்பகரமாக அறியவந்தது.

மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரேடியோ கார்பன் ஆய்வுகளை மேற்கொள்வற்காக இந்த எலும்புக்கூடுகள், புளோரிடாவில் உள்ள ஆய்வகத்துக்கு அனுப்பப்படவிருப்பதாக மன்னார் மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

இதற்கான அனுமதி நீதிமன்றத்திடம் கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தால் நீதி அமைச்சின் ஊடாக, இந்த எலும்புக்கூடுகளை அமெரிக்காவுக்கு அனுப்பி ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

ரேடியோ கார்பன் ஆய்வுகளின் மூலம், எலும்புக்கூடுகளாக மீட்கப்பட்டவர்களின் வயதைக் கண்டுபிடிக்க முடியும்.

நேற்று முன் தினம் வரை 54 எலும்புக் கூடுகள் இந்தப் புதை குழியில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. இவற்றில் ஆண்கள் மற்றும் பெண்களின் எலும்புக் கூடுகளுடன், 5 சிறுவர்களின் எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

சில எலும்புக் கூடுகளில் கூர்மையான பொருள்களால் தாக்கப்பட்டு உடைக்கப்பட்ட சந்தேகத்துக்குரிய தடயங்கள் உள்ளன. எனினும் மேலதிக ஆய்வுகளை மேற்கொள்ளாமல் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியாது.

இந்தப் புதைகுழியின் ஒரு பகுதியில் சடலங்கள், ஒழுங்காக போடப்பட்டுள்ளன. இன்னொரு பகுதியில் ஒழுங்கின்றிப் போட்டுப் புதைக்கப்பட்டுள்ளன. – என்றார். (ஐ)

புதுக்கட்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இல்லை அப்படி ஒரு தீர்மானம் எதையும் நான் இதுவரை எடுக்க வில்லை" – என்று பதிலளித்தார் முதல்வர்.

''நீங்கள் ஒரு கட்சியை ஆரம்பித்தால் அதற்கு ஆதரவு கிடைக்குமா?'' – என்றொரு கேள்வி அவரிடம் எழுப்பப்பட்டது.

''முழு ஆதரவு தரத் தயாராக இருப்பதாக தமிழ் மக்கள் பேரவை அறிவித்துள்ளது. இன்னும் பல கட்சிகள், தரப்புகள் முழு ஆதரவு தரும் தங்கள் விருப்பை வெளிப்படுத்தி வருகின்றன. ஓரிரு நாள்களுக்கு முன்னர் ரெலோ தரப்பிலிருந்தும் அத்தகைய ஆதரவு பற்றிய செய்தியை வாசித்தறிந்தேன். ஆகவே அமோக ஆதரவு தர பலரும் காத்திருக்கின்றனர்.'' – என்றார் விக்னேஸ்வரன்.

"மாகாணத் தேர்தல் இன்னும் ஆறு மாதகாலத்துக்குள் வந்து விடும் போல தோன்றுகின்றது. இதற்குப் பின்னர் கட்சி ஆரம்பித்து, அதனை எதிர்கொள்ள முடியுமா? காலம் போதுமா?'' – என்ற சாரப்பட ஒரு கேள்வி எழுப்பப்பட்டது.

"ஆறு மாதம் என்பது அரசியலில் மிக நீண்ட காலம். பல விடயங்கள் அதற்குள் நடந்தேறி விடும். அதனுடன் இன்னும் மூன்று மாதங்கள் சேர்த்தால் ஒரு குழந்தையே உயிர்ப்பித்து விடும். ஆகவே காலம் பற்றாக்குறை என்று சிந்திக்கத் தேவையில்லை.'' – என்றார் முதல்வர். (உ)

அறிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புதிய அரசமைப்பு தொடர்பான வழிநடத்தல் குழு அடுத்த கட்டக் கூட்டத்தொடர் தொடர்பில் திகதி நிர்ணயம் செய்யப்படவில்லை. எனினும் வழிநடத்தல் குழுவினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தக் குழுவின் பணிகள் இன்னும் நிறுத்தப்படவில்லை.

ஆகவே புதிய அரசமைப்புக்கான பணிகளில் நிபுணர்கள் குழு மும்முரமாகக் களமிறங்கியுள்ளது.

ஏற்கனவே வழிநடத்தல் குழுவில் முன்வைக்கப்பட்ட சர்ச்சைக்கு உள்ளான நிபுணர் குழுவின் அறிக்கையை மீளப் பெற்று தற்போது புதிய வரைவு அறிக்கை துரிதமாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றது. ஆகவே இந்த அறிக்கை தயாரிப்புப் பணிகள் பூர்த்தியானதும் உடனடியாக வழிநடத்தல் குழு கூடும்.

அதன்பின்னர் வழிநடத்தல் குழுவில் வரைவு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். நிபுணர் குழுவின் அனைவரின் இணக்கத்துடன் புதிய அரசமைப்புக்கான வரைவு அறிக்கை கொண்டு வரப்படும். – என்றார். (ஐ)

மடுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொண்டார்.

இதில் மன்னார் மாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மன்னார் மாவட்டக் குருமுதல்வர் விக்டர் சோசை மற்றும் மடுத் திருத்தலத்துக்குப் பொறுப்பாக உள்ள பங்குத் தந்தை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஆலயத் திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட உள்ள நிலையில், அதற்கான பாதுகாப்பு மற்றும் சுகாதார முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று மடு அன்னை ஆலயத்துக்குத் திடீர்ப் பயணம் ஒன்றை மேற்கொண்டு சிறப்பு ஆராதனைகளில் ஈடுபட்டார். (ஐ)

வடமாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் –

வடக்கு மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களிலும் இருக்கும் பாடசாலைகளில் தமிழ், குடியியல், வரலாறு மற்றும் தகவல் தொழில்நுட்பம், இரண்டாம் மொழி சிங்களம் போன்ற பாடங்களில் நிலவும் 353 வெற்றிடங்களை நிரப்பும் நோக்கில் பட்டதாரிகளிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு எழுத்துப் பரீட்சைகள் இடம்பெற்றன.

இரு வினாத் தாள்களிலும் 40 புள்ளிகள் வீதம் 80 புள்ளிகளுக்கு அதிகமாகப் பெற்ற பட்டதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டனர். எழுத்துப் பரீட்சையில் ஒரு பாடத்தில் 40 புள்ளிகளுக்குக் குறைவாகப் பெற்று இரண்டாம்வினாத்தாளில் அதிக புள்ளியைப் பெற்று 80 புள்ளிகளைத் தாண்டினாலும் அவர்கள் சித்தி எய்தியவர்களாகக் கணிக்கப்படமாட்டார்கள்.

353 பேர் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கான நியமனங்கள் எதிர்வரும் புதன் கிழமை வழங்கப்படவுள்ளன. நியமிக்கப்படும் ஆசிரியர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவுப் பகுதி, வடமராட்சி கிழக்கு, வன்னிப் பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கே நியமனம் செய்யப்படுவார்கள். – என்றுள்ளது. (ஐ)

விசேட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிலாபம் நாத்தாண்டிய நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போதைய அரசு மேற்கொண்டு வரும் தவறுகள் எவையும் எமது கட்சி அமைக்கும் அரசின் கீழ் தொடராது. ஒருவர் தவறு செய்தார் என்பதால், அந்தத் தவறைச் செய்ய எமது கட்சி தயாரில்லை. – என்றார்.

கடந்த அரசு மற்றும் தற்போதைய அரசின் ஆட்சியில் நடந்த நிதி உட்பட ஊழல், மோசடிகள் தொடர்பான வழக்குகளைத் துரிதமாக விசாரித்து முடிக்க நல்லாட்சி அரசு, மூன்று விசேட மேல் நீதிமன்றங்களை ஏற்படுத்தும் திருத்தச் சட்டம் ஒன்றை

பயங்கரவாதச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக, கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றத்தில் இன்று திங்கட் கிழமை குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைக் கொலை செய்யச் சதி செய்தார்கள் என்று, 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம், ஐந்து பேரைக் கைது செய்த பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் அவர்களை முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

இவர்கள் ஆரம்பத்தில் சாதாரண சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

எனினும், பல்வேறு காரணங்களுக்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சந்தேக நபர்கள் மீது குற்றம் சாட்டுவதற்குப் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரின் அறிக்கையில் பிரகாரம் சட்டமா அதிபர் தீர்மானித்தார்.

வடக்கு மாகாணத்தில் வழக்கு நடத்தப்பட்டால் அச்சுறுத்தல் காரணமாகச் சில சாட்சிகள், சாட்சியமளிக்க மறுப்பதாலும், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

எனினும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படுவதைத் தாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

''பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சந்தேகநபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று அதிகாரிகளிடம் கோரியிருந்தேன்.

"ஆனால், சட்ட மா அதிபர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இந்த வழக்கைக் கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளார். எனவே, இது எனது கைகளுக்கு அப்பாற்பட்ட விடயம்." – என்றும் அவர் கூறியுள்ளார்.

காராளசிங்கம் குலேந்திரன், குணசேகரலிங்கம் ராஜ்மதன், முருகையா தவேந்திரன், வேலாயுதன் விஜயகுமார், லூயிஸ் மரியநாயகம் அஜந்தன் ஆகியோர் மீதே இன்று கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது. (ஐ)

நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றியது.

இதற்கு அமைய ஏற்படுத்தப்பட்ட முதலாவது விசேட மேல் நீதிமன்றம் அடுத்த சில தினங்களில் தனது விசாரணைகளை ஆரம்பிக்க உள்ளது. (ஐ)

மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தே நேற்று இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினரான விஷ்ணுகாந்தன் அண்மையில், யாழ். மாநகர சபை உறுப்பினரான விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஊடாகக் கொழும்புத்துறைப் பகுதியிலுள்ள வீதிகளுக்குமின்விளக்கைப் பொருத்தியுள்ளார்.

இந்த நிலையிலேயே தமக்கு யாழ். மாநகர சபையின் பிரதி மேயர் துரைராஜா ஈசன் அச்சுறுத்தல் விடுத்தார் என விஷ்ணுகாந்தன் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

கிழக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யவுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு, மண்முனைப் பற்று பிரதேச செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாடிக் கட்டடம் நேற்றுக் காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கிராமிய மட்டத்திலே பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களை 2019, 2020ஆம் ஆண்டுகளில் தொடர்சியாக மேற்கொள்ளவுள்ளோம்.

அனைவரும் இந்தத் திட்டத்தில் பங்குகொண்டு வேலை செய்வதற்காக திட்டங்களை நாங்கள் கிராமத்துக்கு முன்னெடுத்துச் செல்வோம். அந்த அடிப்படையில் கிராம சக்தி வியாபார வேலைத்திட்டம் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கின்றது. கம்பெரலிய எனப்படும் கிராமப் புரட்சியை நாங்கள் ஏற்படுத்திக்கொண்டு செல்கின்றோம்.

அதன்மூலமாக பாரிய வீதி அபிவிருத்திகளை மேற்கொள்ளல், நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தல், தேசிய இளைஞர் சேவைமன்றத்தினுடையவேலைத் திட்டங்கள் போன்றவையெல்லாம் கம்பெரலிய வேலைத்திட்டத்திற்குப் புறம்பாகச் செய்யப்படவிருக்கும் வேலைத்திட்டங்களாகும்.

கிழக்குமாகாணம்போரினால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்பதால் வேறு ஒரு பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டை இங்கு செயற்படுத்த இருக்கின்றோம்.

சுற்றுலாத்துறையை அபிவிருத்திசெய்வதற்குரியவேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நாங்கள் கலந்துரையாடியுள்ளோம். அதனை அபிவிருத்திசெய்வதில் ஒரு பிரச்சினை இருக்கின்றது. அது, போக்குவரத்துப் பிரச்சினையாகும்.

இந்தப் பகுதியில் விமானப் போக்குவரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றோம். அதன்மூலம் சுற்றுலாத்துறையினூடாகப் பலருக்கு வாழ்வாதாரம் கிட்டும். – என்றார். (ஐ)

இலங்கை சட்டக் கல்லூரி சட்ட மாணவர் இந்து மகா சபையின் 'நக்கீரம்' இதழ் வெளியீடு, நேற்றுக் காலை வெள்ளவத்தை தமிழ்ச் சங்க கருத்தரங்க கூடத்தில் நடை பெற்றது. நிகழ்வில் 'அன்றும் இன்றும்' எனும்பொருள் பற்றி வடக்கு முதலமைச்சர் நீதி யரசர் சி.வீ. விக்னேஸ்வரன் பிரதம அதிதி உரையை ஆற் றினார். அந்த நீண்ட உரை இங்கு பிரசுரமாகின்றது.

அன்று முதல் இன்று வரை ஏமாற்றப்பட்டு வரும் தமிழ்த் தலைவர்கள்!

சிலவற்றைக் கூறப் போனால் என் கட்சியில் நான் வேண்டாதவனாக பார்க்கப்படுகின்றேன்...!

இப்போதும் பகுத்தறிவுள்ள அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த நாங்கள் ஒன்று கூடி சிந்திக்கவில்லை...!

பல வருடங்களின் பின் சட்டக் கல்லூரி நிகழ்வொன்றில் பங்குபற்று கின்றேன். உங்கள் நக்கீரம் இத முக்கு வருடா வருடம் கட்டுரைகள் எழுதி அனுப்பிய காலம் இருந்தது. அரசியலுக் குள் நுழைந்ததும் என்னை அறிவுடை யோர் பட்டியலில் இருந்து நீங்கள் அவிழ்த்து விட்டீர்களோ அல்லது நானா கவே கழன்று கொண்டே னோ நினை வில்லை! என்னுடைய முதல் ஐந்தாண்டு அரசியல் வாழ்க்கை முடியுந்தறுவாயில் என்னை நீங்கள் அழைத்ததில் இருந்து மீண்டும் என்னை அறிவுடையோர் பட்டிய லுக்குள் ஏற்கச் சித்தமாய் இருக்கின்றீர் கள் என்பது புலனாகியுள்ளது.

நான் சட்ட மாணவர் தலைவராக இருந்த வருடத்தில் தான் அதாவது 1963 இல் தான் உங்கள் இந்து மகா சபை உதி த்தது. சாவகச்சேரியில்பின்னர் சட்டத்தரணி தொழிலை பார்த்த ஏ.மயில்வாகனம் என்ற அப்போதைய சட்ட மாணவரே உங் கள் முதல் தலைவராக இருந்தார். செயலா ளராக இருந்தவர்தி.யோகநாதன் அவர்கள்.

நான் சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாக இருந்த காலத்தில் இருவரும் என் முன்னி லையில் வழக்குகளில் ஆஜராகி இருந்த னர். இப்பொழுது இருவருமே எம்முடன் இல்லை.

அன்றைய காலத்தையும் உங்க ளையும் இணைக்கும் பாலமாக நான் என்னைக் காண்கின்றேன். இவ்வாறு இணைக்கும் காலகட்டத்தையே வரலாறு என்ற கண் கொண்டு பார்ப்பார்கள் அறி ஞர்கள்.

சரித்திரம் என்ற பாடம் எமது மாணவ பருவத்தில் எமது பாட விதானத்தில் முக்கி யத்துவம் பெற்றிருந்தது. நாம் இலத்தீன் மொழி படித்தோம். சிலர் இலத்தீனையும் கிரேக்க மொழிகளையும் படித்தார்கள். சிலர் சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிக ளைத் தத்தமது தாய் மொழிகளுடன் சேர்த்துக் கற்றார்கள். அம் மொழிகளும் அவற்றின் இலக்கியங்க ளும் வரலாற் றையே முதன்மைப்படுத்தின. இவற்றை விட புராதன இலங்கையின் வரலாறு, நவீன இலங்கையின் வரலாறு, ஐரோப் பிய வரலாறு என்று சரித்திரம் பல பாடங்க ளாகக் கற்பிக்கப்பட்டது.

ஆனால் 1960களில் படிப்படியாக சரித்திரம் பற்றிய அறிவு குறையத் தொடங் கியது. அதற்குப் பதிலாக மாணவ மாண வியரிடையே விஞ்ஞானம், தொழில் நுட் பம் போன்றவை முதன்மை பெறத் தொடங் கின.

காரணம் சரித்திர அறிவு, மொழியறிவு போன்றவை விரைவானதும் வளமானது மான வேலை வாய்ப்பைப் பெற்றுத்தர முடியாது போனமையே. வெளளையர் காலத்தில் மூன்று R கள் பயிற்றப்பட்டன. வாசித்தல் (Reading), எழுதுதல் (writhing) மற்றும் எண்கணிதம் (Arithmetic) ஆகி யனவே அவை. அந்தப் பாடங்களில் பாண்டித்தியம் பெற்றவர்கள் தான் இலிகி தர்களாக வெள்ளையர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர்களுக்கு வேலை யும் பெற்றுக் கொடுக்கப்பட்டது. காலம் போகப் போக மூன்று R கள் போதாமல் போயிற்று. வரலாறும் தேவையற்றதாகி விட்டது. 1966இல் 17,507 பேர் மேல் வகுப்புகளில் சரித்திரம் படித்திருந்தார் கள் எனின் 1990ல் 1981 பேரே சரித்திரம் படிக்க முன்வந்தார்கள்.

இப்பொழுது எத்தனை பேர் சரித்தி ரத்தை ஒரு பாடமாக மேல்படிப்புக்கு ஏற் றுக் கொண்டுள்ளார்கள் என்று நான் அறியேன். ஆனால் இலங்கை சுதந்திரம் பெற்ற தினத்தில் இருந்து இன்று வரையி லான கால சரித்திரத்தை எத் தனை பேர் அறிவார்கள் என்பது தான் என்னுடைய கேள்வி.

அவற்றை ஏன் அறிய வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். எமது பாரம்பரியம் பற்றி, வரலாறு பற்றி, சரித்திரம் பற்றி சரி யாகவோதவறாகவோ நாம் அறிந்திருக்கும் அறிவு தான் எம்மை மறைமுகமாக இன் றும் ஆட்டிப்படைக்கின்றன. அந்த அறிவு தவறு டையதாக இருந்தால் நாம் மற்ற வர்களால் வழிநடத்தப்படுவோம். அத்து டன் மற்றவர்களின் சரித்திரம் குறைகள் உடையதாக இருந்தால் அவற்றின் குறை களை மறைத்துத்தம்மைப் பற்றியதவறான கருத்துக்களை அவர்கள் பரப்பச் செய்ய எமது அசட்டையீனம், அறிவின்மை உதவி புரிவன. இன்று அது தான் இந்த நாட்டில் நடைபெறுகின்றது. எமது அறிவின்மை பிழையான சரித்திரத்தை உலகத்திற்கு எடுத்துக் காட்ட வழிவகுத்துள்ளது.

ஆகவே வரலாறு பற்றிய அறிவு எமது மாணவ மாணவியர்க்கு மிகவும் அவசி யம் என்பதையே எடுத்துச் சொல்ல வருகின் றேன். அதைப் பாடமாகப் படிக்காவிடினும் உங்கள் பரந்த அறிவினுள் பகுதியாகவே னும் புகுத்தி வைத்தல் நன்மை பயக்கும் என்று நம்புகின்றேன்.

1948 தொடக்கம் இன்று வரையில் 70 வருடங்களுக்கு இலங்கையில் நடை பெற்றவையும் வரலாறே. அது அரசியலாக இருக்கலாம் சமூகவியலாக இருக்கலாம் பொருளாதாரம் பற்றியதாக இருக்கலாம். இந்த காலகட்டத்தின் ஒரு பார்வையாளராக நான் இருந்துள்ளேன் என்பதையே பால மென நான் முன்னர் குறிப்பிட்டேன்.

இந்த அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக அண்மைக்கால சரித்திரத்தை உற் றுப் பார்க்கும் போது தமிழ் மக்கள் இன்று வரையில் எவ்வாறு ஏமாற்றப்பட்டு வந்துள் ளார்கள் என்பது புலப்படும்.

வெள்ளையர் காலத்தில் 1920 வரையில் இந் நாட்டின் அரசியல் அரங்கில் கொடிகட் டப் பறந்த தமிழ்த் தலைவர்கள் பிரிட்டிஷா ரிடம் இருந்து அதிகாரம் இலங்கைக்கு மாறிய போது இருதரப்பாருக்கும் இடையே யான உடன்பாட்டில் பங்கு கொள்ளவில்லை. ஏற்கனவே சேர் பொன்னம்பலம் அருணா சலத்துடன் எழுத்து மூல உடன்படிக்கை வைத்திருந்துங் கூட பதவி தமது கைக்கு வந்ததும் எவ்வாறு பெரும்பான்மைச் சமூ கத்தினர் அவரை ஏமாற்றினார்களோ அதே போல் சுதந்திரத்தின் போதும் நடந்தது. அதிகார மாற்றம் பிரித்தானிய குடியேற்ற நாட்டுக்கும் டி.எஸ்.சேனாநாயக்க தலை மையிலான உயர் குடி சிங்களக் குழுவொன் றின் இடையேயுந்தான் நடைபெற்றது. இருவரும் தமது நல

உரித்துக்களைப் பாதுகாத்துக் கொண் டார்கள். தமிழர்கள் அதில் கலந்து கொள்ள வில்லை. அங்கு தான் தமிழ் மக்களின் உரித்துக்கள் பற்றியதான சிந்தனைகள் கைவிட்டுப் போயின. ஆனால் இந்த உடன் பாட்டின் அடிப்படையில்தான் சிங்கள மக் கள் அதிகாரத்தைத் தமது கைகளுக்கு முற்றிலுமாக மாற்றிக் கொண்டார்கள். ஆனால் வெள்ளையர் போனதும் நாங்கள் அதிகாரத்தைப் பகிர்வோம் என்று தமிழ்த் தலைவர்களிடம் கூறியே அதிகார ம ாற்றத்தைச் செயல்படுத்தினார்கள். எனினும் அதிகாரம் கைக்கு வந்த தும் முற்றிலும் மாறினார்கள் பெரும் பான்மையினத் தலைவர்கள். இதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதே போல்த்தான் அண்மையில் தற்போதைய அரசாங்கமும் எமது தமிழ்த் தலைவர்களை ஏமாற்றியது. 2016ல் அரசியல் தீர்வொன்று வரும் என்று எண்ணிய நாம் 2018 இல் கூட தீர்வை நோக்கிய வண்ணமே இருக்கின்றோம். கயிறு கொடுத்தலில் சூரர்கள் எங்கள் பெரும்பான்மை யின அரசியல்வாதிகள்!

கயிறைக் கையில் எடுத்துக் காத் திருப்பவர்கள் தான் தமிழ்த் தலை வர்கள். கயிறைக் கொடுத்து மேலே உங்களை இழுத்துச் செல்வோம் என்பார் கள் கயிறு கொடுப்பவர்கள். கடைசியில் கயிறு மட்டுமே கைக்கு வரும். கை கொடுத்து மேல் எழுப்ப மாட்டார்கள். சோல்பரி அரசி யல் யாப்பை ஏற்றுக் கொள்ளுமாறு சிறு பான்மையினரிடம் டி.எஸ்.சேனாநாயக்க கோரியபோது அவர் பின்வருமாறான ஒரு உறுதி மொழியை அளித்தார் – இலங்கை தேசிய காங்கிரஸ் சார்பிலும் என் சொந்தச் சார்பிலும் சிறுபான்மையினருக்கு ஓர் உறுதி மொழி அளிக்கின்றேன். சுதந்திர இலங்கையில் எம் பொருட்டு எந்தவிதமான பாதிப்புக்கும் நீங்கள் முகம் கொடுக்க மாட்டீர்கள் என்றார்.

இலங்கைத் தமிழர்களிடம் அவர் தனித்துவமாகக் கேட்டார் இலண்டனில் இருந்து நீங்கள் ஆளப்பட விரும்புகின்றீர் களா அல்லது சுதந்திர இலங்கையில் இலங்கையர் என்ற முறையில் எம்முடன் சேர்ந்து ஆள விரும்புகின்றீர்களா? என்று. சுதந்திர இலங்கையின் முதல் பிரதம மந்தி ரியாக அதன் பின் பதவி ஏற்ற பின் உட னேயே அவர் செய்த முதற்காரியம் 10 இலட் சம் மலையக மக்களின் உரித்துக்களைப் பறித்து அவர்களை நாடற்றவர்கள் ஆக்கி யமையே.

பெரும்பான்மைத் தலைமைத்துவம் இன்று வரையில் என்னவாறு நடந்து கொண்டு வருகின்றது என்பது சரித்திரத் தின் மூலமே அறிகின்றோம். அதாவது சுதந்திர காலந்தொடக்கம் இன்று வரையி லான அண்மைய கால சரித்திரத்தின் வாயி லாக அறிகின்றோம். இவை பற்றித் தெரியா விட்டால் மேலும் மேலும் நாம் ஏமாற்றப்படு வோம்.

1975 ஆம் ஆண்டில் அவர் இறக்க சில வருடங்களுக்கு முன் வால்டர் ஷ்வார் ட்ஸ் Walter Shwartz என்றவருக்கு காலஞ் சென்ற தந்தை செல்வா பின்வருமாறு கூறியிருந்தார். நாங்கள் செய்த அடிப்ப டைத் தவறு பிரித்தானியர் எம்மை விட்டு ஏகும்போது அவர்களிடம் நாம் எமது சுதந்திரத்தைக் கோராமையே என்றார். அப்பொழுது நாம் எம்மை வடகிழக்காகப் பிரித்து சிந் திக்காமையே நாம் எமக்கு சுதந்திரம் கேட்காததன் காரணம். அப்போது தெற் கில் இருந்த சிங்களவர்களும் தமிழர் களும் மிக அந்நியோன்யமாகப் பழகி வந்தார்கள்.

1926ல் ஒக்ஸ்போட் பல்கலைக்கழ கத்தில் பட்டம் பெற்று இலங்கை திரும்பிய S.W.R.D பண்டாரநாயக்க இலங்கைக்கு சமஷ்டி முறையே சிறந்தது என்று கூறிய போது அதனை எதிர்த்தது எமது தமிழ்த் தலைவர்கள் தான். பண்டாரநாயக்க தமிழ ரும் சிங்களவரும் தத்தமது இடங்களில் இருந்து வாழ்வதே உகந்தது என்று கண்டு சமஷ்டி முறையை முன் வைத்தார். அன் றைய காலகட்டத்தில் கண்டியச் சிங்கள வரும் சமஷ்டி முறையையே நாடினார்கள்.

ஒரு வேளை தமிழ் மக்கள் வெள்ளை யர் காலத்தில் அதிகம் சலுகை பெற்று தெற்கில் வாழ்ந்து வந்தார்கள் என்ற அடிப்படையில் அவர்களின் ஆதிக்கத் தைக் குறைத்து அவர்களை வடகிழக்கிற்கு அனுப்ப இவ்வாறான ஒரு கருத்தை பண் டாரநாயக்கா அவர்கள் முன்வைத்தாரோ நானறியேன். ஆனால் தமிழர்கள் அந்தக் காலத்தில் வெள்ளையர் ஆட்சியில் தம க்குக் கிடைத்திருந்த நற்சலுகைகளைக் கருத்தில் வைத்து அது தொடர்ந்து தமக் குக் கிடைக்கும் என்ற எண்ணத்தில் அவர் கள் சமஷ்டியை எதிர்த்திருக்கலாம். அப் போது ஈழம் என்ற கருத்து தமிழ் மக்களி டையே வேரூன்றியிருக்கவில்லை.

ஆனால் இன்று அதே பெரும்பான்மை யினச் சமூகம் சமஷ்டி தர முடியாது என்று கூக்குரல் இடுகின்றார்கள்.

என்ன நடந்தது என்று பார்த்தோமா னால் சுமார் 1920 வரையில் சிங்கள மக்கள் தம்மைத் தமிழ் அரசியல்த் தலை வர்கள் வழி நடத்திச் செல்கின்றமையை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். சேர் பொன் னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம் பலம் அருணாச்சலம், சேர் முத்துக்குமார சுவாமி போன்ற தலைவர் களை அதுவரை யில் ஏற்றிருந்தார்கள்.

சிங்கள மக்கள் சார்பில் 1915 இல் இலண்டன் போய் வந்த

இராமநாதனை தேரில் வைத்துத் தாமே இழுத்துப் போனார்கள் பெரும்பான்மை யினத் தலைவர்கள். ஆனால் 1920ல் சுயாட்சி தரப்போவதாக பிரித்தானியர் அறி வித்த பின்னர் சிங்களவர்கள் சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டமையை எம்மவர் காலம் கடந்தே உணர்ந்து கொண்டார்கள். தமது ஆதிக்கம் இனி மும்முரமடைய வேண்டும் என்ற அடிப்படைக் கோட்பாட்டின் அடிப்ப டையிலேயே பெரும்பான்மையின அரசி யல் தலைவர் களால் காய்கள் நகர்த்தப்பட் டன. அப்பொழுதே இந்நாடு பௌத்த சிங்கள வருடையது, மற்றவர்கள் எம்மை அண்டி வாழ வேண்டுமே ஒழிய எமது ஆதிக்கத் திற்கு அப்பால்பட்டு வாழ விடக் கூடாது என்ற எண்ணம் உதிக்கத் தொடங்கி விட்டது. அதனால்தான் 1930களிலேயே Pan Sinhala எனப்படும் சிங்களவர் மட்டும் அதி காரம் பெற்ற அரசவை ஆக்கப்பட்டது.

D.S.சேனாநாயக்கவிற்கு அதற் கான அடி எடுத்துக் கொடுத்தது கணிதப் பேராசிரி யர் சி.சுந்தரலிங்கம் என்று கூறப் படுகிறது. அதே சி.சுந்தரலிங்கம் தான் ஈழம் கோரிய அடங்காத் தமிழன் என்று பின்னர் அழைக் கப்பட்டார். ஏமாற்றப்பட்ட பின்னர் ஏற்பட்ட மாற்றம் அது. முன்னர் சேர் பொன்னம்பலம் அருணாச்சலமும் ஏமாற்றப்பட்டதும் இலங் கைத் தமிழர் பேரவையை தொடக்கியிருந் தார். ஆகவே ஏமாற்றப்பட்ட பின்னர் எமக்கு ஏற்பட்ட பட்டறிவே எமது அரசியலை இன்றுவரை யில் நிர்ண யித்து வரு கி ன் ற து . நாமாக நிர் ணயித்தஒரு நோக்கை இ ல க் கை அடைய நாம் முனையவில்லை. ஆனால் அவ்வாறான இலக்கையடைய ஆயுதங்கள் எடுக் கப்பட்டும் இன்று அவை மௌனிக்கப் பட்ட நிலையில் உள்ளன. நாம் தொடர்ந்து பட்டறிவின் பாற்பட்டே காய் களை நகர்த்தி வருகின்றோம்.

(இன்னும் வரும்...)

புனர்வாழ்வு முகாமிலிருந்து இரு கைதிகள் தப்பியோட்டம்

வெலிகந்தை சேனபுர பகுதியில் உள்ள போதைப் பொருள் பாவனையாளர்களுக்கான புனர்வாழ்வு முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரண்டு கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர் என வெலிகந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு தப்பிச் சென்ற இருவரும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் போதைக்கு அடிமையான நிலையில், நீதிமன்ற உத்தரவுக்கமைய புனர்வாழ்வு மத்திய நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டவர்களெனத் தெரியவந்துள்ளது.

இதிலொருவர் அம்பலாங்கொட கஹச பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதானவரெனவும், மற்றையவர் பனாகொட பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதானவரெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இரண்டு சந்தேகநபர்களும் நேற்று முன் தினம் மாலை 5.45 மணியளவில் முகாமிலிருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில், இவர்களைத் தேடி விசேட சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என வெலிகந்தைப் பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி பீ.டபிள்யு. பிரேமலால் தெரிவித்தார். (ஐ)

மிளகாய்த் தூளைத் தூவி 2 கோடி ரூபா கொள்ளை

இருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜூலை 30

புளத்சிங்கள பகுதியிலுள்ள தனியார் வங்கியொன்றின் ஏ.ரி.எம் இயந்திரத்தில் வைப்பிட எடுத்துச் செல்லப்பட்ட இரண்டு கோடி 24 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதையடுத்து சந்தேகத்தின் பேரில் இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அதிகாரிகள் உணவகம் ஒன்றில் உணவு உட்கொள்வதற்காகச் சென்ற வேளையில் அவர்கள் மீது மிளகாய்ப் பொடித் தூவி பணம் கொள்ளையடிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அந்த வங்கியின் பாதுகாப்பு ஊழியர் மற்றும் வாகனச் சாரதி சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

தனியார் வங்கிக்குச் சொந்தமான வானொன்றில் ஒரு பாதுகாப்பு அதிகாரி, இரண்டு வங்கி அதிகாரிகள் மற்றும் வாகனச் சாரதி உட்பட நால்வர் அடங்கிய குழுவினால் இரண்டுகோடி 24 இலட்சம் ரூபா பணம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட பணம் புளத்சிங்கள ஹொரண வீதி பஹல நாரகல பிர தேசத்தில் வைத்து நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் அறுவர் அடங்கிய கொள்ளைக் கும்பலினால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

புளத்சிங்கள பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கொள்ளையர்களுக்கு உதவும் வகையில் செயற்பட்ட சந்தேகத்தின் பேரில் வாகனச் சாரதி மற்றும் பாதுகாப்பு அதிகாரியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வங்கியிலிருந்து பணத் தொகையை வெளியில் எடுத்துச் சென்ற இடத்திலிருந்து பணம்கொள்ளையடித்துச் செல்லப்பட்ட காலப் பகுதியில் இந்த நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் சி.சி.ரி.வி பதிவுகள் தொடர்பில் விசேட அவதானம்செலுத்தப்பட்டுள்ளதாகவும் விரைவில் குற்றவாளிகள் கைதுசெய்யப்படுவர் எனவும் பொலிஸார் கூறினர். (ஐ)

கருணாநிதி சிகிச்சை பெறும் படம் நேற்று வெளியாகியது

சென்னை,ஜூலை30

தி.மு.க. தலைவர் கருணாநிதி காவிரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் படம் முதன் முறையாக நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு நேற்று காவிரி வைத்தியசாலைக்கு சென்றார். அவருடன் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித்தும் சென்றார். அப்போது, கருணாநிதி சிகிச்சை பெற்றுவருகின்றமை நேரடியாகப் பார்வையிட இருவருக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

கருணாநிதியின் குடும்பத்தார் தவிர்த்து வேறு ஒரு நபர் அவர் சிகிச்சை பெறும் இடம் வரை அனுமதிக்கப்பட்டமை முதல் முறையாக நேற்றுத்தான் நடந்தது.

புகைப்படத்தில் கருணாநிதிக்குச் செயற்கை சுவாசம் அளிக்கப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது. (ஐ)

NALIN Information Technologies Pvt Ltd.

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.

Jaffna CCTV Surveillance Camera

CCTV

யாழில்

எங்குமில்லா சலுகை

வடமாகாணத்தின் HCSA அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு நிறுவனம்.

கொள்வனவு செய்யும் அனைத்து கண்காணிப்பு கமரா பக்கேஜ்களுக்கும் Hard Disk இலவசம்

TWO CAMERA PACKAGE

AHD DVR 4 CHANNAL 1080 Lite
AHD Camera 2 Megapixcel (20m IR Night Vision)
BNC 4, DC Connector 2
Power Supply Unit 12VDC
Power Plus Rg58 Cable 30m
Warranty 2 Years

500GB Hard Disk
8GB Back up Pendrive &
3U Cabinet
FREE

Rs.23,000/-

FOUR CAMERA PACKAGE

AHD DVR 4 CHANNAL 1080 Lite
AHD Camera 2 Megapixcel (20m IR Night Vision)
BNC 8, DC Connector 4
Power Supply Unit 12VDC
Power Plus Rg58 Cable 50m
Warranty 2 Years

1TB Hard Disk
8GB Back up Pendrive &
3U Cabinet
FREE

Rs.29,990/-

இச்சலுகை 7 நாட்கள் மட்டும்

நிறுவுதல் கட்டண விபரங்களுக்கு அலுவலகத்திற்க்கு விஜயம் செய்யவும்.
No.195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121, 077 766 7975, 021 222 4994

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.07.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.